# சமர்

8

மார்ச் - 1990



விலை ரூபா: 7-00

## போராட்ட சூழ்நிலையும் படைப்புச் சுதந்திரமும்

சுமார் பத்துவருடங்களின் பின் சமர் மீண்டும் வெளிவருகிறது பத்துவருடம் என்பது நீண்ட இடைவெளிதான். சில சஞ்சிகை ஆசிரியர்கள் கற்பிதம் செய்வது போல் அல்லாமல் சமர் வெளிவராத காரணத்தினுல் இலக்கிய உலகிற்கு நட்டம் எதுவும் ஏற்பட்டதாக நான் கருதவில்லை, இந்த பத்து வருட 'தவத்' திற்கு பலகாரணங்கள் சொல்லலாம் இதுபற்றி வாசகர்களுக்கு அக்கறை இருக்கப் போவதில்லை. இந்த தேசத்தைப் போலவே சமருக்கும் பல பாதிப்புக்கள் பல தடவைகள் வெளியிடுவதற்கு முயற்சி எடுத்தபோதும் சூழ்நிலை கைநழுவிப்போய்க் கொண்டே இருந்தது. இந்தத் தேசம் புதிய அனுபவங்களை, பெற்றிருக்கிறது போராட்டங்களை சந்தித்து இருக்கிறது. புதிய பாடங்களை படித்திருக்கிறது. புதிய பாய்ச்சலை பார்த்திருக்கிறது, தேவைக்கும் அதிகமாகவே இரத்தம் சிந்தியிருக்கிறது. மனிதர்களை இழந்திருக்கிறது இவைகலை இலக்கியத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கவேண்டும். சில கவிதைகள் சில கதைகள் சில ஓவியங்கள். சில அழகான "ஓவ்செட்" அஞ்சலி சுவரொட்டிகள் இதற்கும் மேல் இலக்கியத்தில் எதைச்சாதித்திருக்கிறோம் இதுதவிர மரத்துப்போன இதயங்களையும் மூளை பேதலித்த மனிதர்களை பற்றியும் இலக்கியங்கள் பேசமுடியும் எமது போராட்டத்தை உலகம் பார்க்கிறது எமது பிரச்சினை சர்வதேச அரங்கில் கொழுந்து விட்டு எரிகிறது. "பேதுறு" மலையின் மீது ஏறி நின்று உரத்து முரசறைவோம். மனிதனுக்கு மேலாக எதுவும் இல்லை.

இன்னெருவிதத்தில் நாம் இருட்டில் இருந்து கல் எறிந்து கொண்டிருக்கிறோமா? எழுத்தாளன் கடந்த கால ஆயுதச் சூழ்நிலையில் சுதந்திரமாகச் செயல்படமுடிந்ததா? கலை இலக்கியங்கள் எக்காலத்திலும் சுதந்திரமானவைதான். ஆனுல் கலை இலக்கியவாதி - சூழ்நிலை எவ்வளவு சுதந்திரம் அளிக்கின்றதோ அவ்வளவுக்குத்தான் அவன் சுதந்திரமானவன். போராட்டசூழ்நிலைகளா[illegible] பாதிப்புற்ற கலைஞர்கள் முழுமையா[illegible] தம்மை வெளிப்படுத்த முடியாமல் போ[illegible]மைக்கு இதுவும் கூட காரணமாக இ[illegible]கலாம். இது ஆரோக்கியமற்றது, பெ[illegible] வுடமைப்புரட்சிக் காலத்திலும் தேசியவி[illegible]தலைப் போராட்ட காலத்திலும் கலைஞன் போராட்டத்திற்கு துணை நின்றிருக்கின்றுன் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் தந்திருக்கின்றுன். துரதிஸ்டவசமாக அதிகார வர்க்கம் அவர்களை அச்சுறுத்தி கலைஞனி[illegible] வீரியத்தையும் விகர்சிப்பையும் முட[illegible] இருக்கிறது. மகத்தான கலைப்படைப்புக்[illegible] காலத்தின் அங்கீகாரத்தை நோக்கி (தலை) மறைவு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறது. புதிய அமைதிச்சூழலில் கடந்துபோன காலங்களில் இழந்துபோன ஆதாயங்களையும் வெற்றி கொள்ளப்பட்ட பெறுபேறுகளையும் கணக்கில் கொள்வோம்.

வரலாறு கற்றுத்தருவது தவறுகள் திருத்தப்படவேண்டும். கலை இலக்கியம் அரசியல், சமுகம் எல்லாத்துறைலும் தவறுகள் தி[illegible] தப்படவேண்டும் மனிதனின் எதார்த்த இ[illegible] நிலையில் கால் ஊன்றி இலக்கி[illegible] மனிதனின் முழு வாழ்க்கையிலும் ஊடுரு[illegible] பாய வேண்டும், புதிய வாழ்க்கைக்கான போராட்டத்தின் முன்னுரைகளாக இலக்கிய[illegible] கள் எழுதப்பட வேண்டும் புதிய ஒளி பாய்ச்ச வேண்டும் "மாயைகள்" அகல "சமர்" உண்மைக்கு நெருக்கமாக நிற்கு[illegible]

இன்னும் சில — இந்த இதழில் தவிர்க்க முடியாமல் மொழி பெயர்ப்புக்கள் — ஏற்கனவே வெளிவந்தவையும் கூட அதிகமாக பிரசுரமாகியிருக்கின்றன நான் விரும்பிப் படித்த படைப்புக்களே இதற்கு உதவியுள்ளன. சில படைப்பாளிகளுக்கு ஐயம். நின்று போன சிற்றிலக்கிய ஏடு இனிவருமோ? "சமர்"இன் புதிய போக்கை அவதானிக்க கால அவகாசம் சிலருக்குத் தேவை போலும்.

# புதிய பூமி எழுந்து வரட்டும்

மார்கரேட் வாக்கர் / அமெரிக்கா

எல்லா இடங்களிலும்
தங்கள் அடிமைப் பாடல்களை
— ஒப்பாரிகளை, சோககீதங்களை
மகிழ்ச்சிப் பாடல்களை -
பாடிக்கொண்டிருக்கும்

எனது மக்களுக்காக

மகிழ்ச்சியைப் பரப்பியபடி
கண்மூடித் தனமாகத் திரிகிற
சோம்பேறித் தனத்தினால்
நேரத்தைப் பாழடிக்கிற
பசியெடுக்கும்போது தூங்கிவிடுகிற
சுமை அதிகமாகும்போது கதறுகிற
நம்பிக்கை அற்றுப் போகும்போது
குடிக்கிற

எனது மக்களுக்காக

கண்ணுக்குப் புலப்படாமல்
எல்லா இடங்களிலும் ஏறி உட்கார்ந்துகொண்டு
சிரிக்கிற ஜென்மங்களினால்
தங்களுக்குத் தாங்களே கட்டுப்பட்டு
விலங்கிடப்பட்டு,
குழப்பிவிடப்பட்டுள்ள

எனது மக்களுக்காக

குழப்பங்களிலிருந்தும்
இரட்டை வேடங்களிலிருந்தும்
தவறுகப் புரிந்து கொள்ளலிலிருந்தும்
நல்ல வழிகளை உருவாக்க முயன்று
நிமிர்ந்து நின்று விழிக்கும்
எனது மக்களுக்காக

எல்லா முகங்களையும் எல்லா மக்களையும்
எல்லா ஆண்களையும, பெண்களையும்
அவர்களின் கணக்கிடமுடியா தலைமுறைகளையும்
அணைத்துக் கொள்ளும் ஓர் உலகை
படைக்க முயலும்

எனது மக்களுக்காக

ஒரு புதிய பூமி எழுந்து வரட்டும்
வேறொரு புதிய உலகம் பிறக்கட்டும்
வானத்தில் அமைதி என்பது
அழகுறப் பொறிக்கப்படட்டும்
அஞ்சாமை மிக்க ஓர் இரண்டாம் தலைமுறை
வெளிவரட்டும்
விடுதலை வேட்கை நிரம்பிய மக்கள் வளரட்டும்.

எதையும் குணப்படுத்தும் அழகும்
உறுதியுடன் பற்றிக்கொள்ளும் வலிமையும்
நம் இரத்தத்திலும், உயிரிலும்
விடாமல் துடிக்கட்டும்,
மனிதன் என்னும் ஓர் இனம் எழுந்துவந்து
அதிகாரத்தைக் கைப்பற்றட்டும்.

---

## செத்துப்போனவர்

*கார்ல் வெண்டல் ஹைன்ஸ் / வடக்கு கரோலினு.*

இப்போது
அவர்
பத்திரமாக இறந்து விட்டார்.
நாம் அவருக்குத் துதிபாடுவோம்.
அவர் புகழ்பாட நினைவாலயம் அமைப்போம்
அவர் பெயரில்
கோஷங்கள் எழுப்புவோம்.
வசதியான வீரர்கள்
அவர்கள் வாழ்விலிருந்து
நாம் ஜோடிக்கும் உருவங்களை
வாதுக்கு அழைப்பதற்காக அவர்கள்
எழுந்து வரப்போவதில்லை.
சிறந்ததோர் உலகைப்
படைப்பதைக் காட்டிலும்
கட்டடங்கள் எழுப்புவது மிகவும் சுலபம்.
ஆகவே,

இப்போது அவர்
பத்திரமாக இறந்துவிட்டார்.

நாம்,
மனசாட்சிக்கு சிரமமின்றி
நம் குழந்தைகளுக்கு போதிக்கலாம்,
அவர் மிகப்பெரிய மனிதரென்று...
அவர் எந்த கொள்கைக்காக
வாழ்ந்தாரோ
அந்த கொள்கை வெறும் கொள்கையாகவே
இருக்கிறதென்று தெரிந்த பின்னும்
அவர் எந்த கனவுக்காக
உயிர் துறந்தாரோ
அது இன்னமும் ஒரு கனவாகவே
—ஒரு செத்துப்போனவரின் கனவாகவே—
இருக்கிறதென்று
அறிந்திருந்தாலும் கூட'

கே. கணேஷ்

## பார்ப்பரா கவிதைகள்

கே. எஸ். சிவகுமாரன்

இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான கே. கணேஷ் பல வெளிநாட்டுக் கவிஞர்களின் கவிதைகளை ஆங்கிலமொழி மூலம் தமிழில் பெயர்த்துத் தந்துள்ளார். இவற்றில் சில நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இவற்றிலே சோவியத் கவிஞர் அனட்டோல் பார்ப்பரா எழுதிய கவிதைகளின் தமிழாக்கமும் இடம்பெறும்.

ரஷ்ய மொழி இலக்கிய ஏடான ''மொஸ்காவா''வின் கவிதைப்பகுதி ஆசிரியர் பார்ப்பரா. ஐந்து கவிதைத் தொகுப்புகள், வரலாற்றுக்காவியம் ஒன்று, மற்றும் பல ஆய்வு நூல்களின் ஆசிரியர் பார்ப்பரா. அது மாத்திரமல்லாமல், பல இந்திய மொழிகளில் வெளிவந்த படைப்புக்களை, ருஷ்ய மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். ''இந்தியா குறித்து ஒரு சொல்'' என்ற பார்ப்பராவின் நூல் அண்மையில் வெளியிடப்பட்டிருப்பதாக அறிகின்றோம்.

தமிழ்க்கவிஞன் சுப்ரமணியபாரதி குறித்து பார்ப்பரா இயற்றிய பாடல் விதந்து கூறப்பட்டுள்ளது. இதற்காகவாகுதல் நாம் பார்ப்பராவை அறிமுகம் செய்துகொள்ளல் அவசியமாகின்றது,

கே. கணேஷின் தமிழாக்கத்தினூடாக பார்ப்பராவை நாம் ஓரளவு அறிந்துகொள்ள முன்னர் தமிழாக்கம் செய்தவரான கணேஷ் அவர்களின் கூற்று ஒன்றையும் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இதுதான் அந்தக் கூற்று.

''பார்ப்பராவின் கவிதைகளில், கீழ்நாட்டின், குறிப்பாக பௌத்த, இந்து தத்துவங்கள். இழையோடி உள்ளதையும் மகாகவி தாகூரின் தாக்கத்தையும் காணலாம்'' கணேஷ் அவர்களின் அவதானிப்பு சரியானது என்பதைப் பார்ப்பரா கவிதைகள் காட்டுகின்றன.

சுப்ரமணியபாரதியை இந்த சோவியத் கவிஞர் எவ்வாறு கணிக்கிறார்?

பாரதி ரஷ்யப் புரட்சி நிகழ்வுகளை நன்குணர்ந்தவன். புரட்சியின் சித்தாந்த உண்மைகளை முதன் முதலில் இந்தியாவில் பரப்பியவன் பாரதி. ரஷ்யாவின் அந்த நாள் உண்மை நிலைகளை 'சுதேச மித்திரன்' மூலம் பரப்பியவன். புரட்சிப் பெருந்தத்துவத்தின் சாளரத்தைத் திறந்துகாட்டிய காந்தியை மகாத்மா என்று வாழ்த்தியவன் பாரதி. ஜெகம் அனைத்தும் எமது நாடுபோல் சிறந்தவைதான் என்பதை உணர்த்தியவன் பாரதி. அனைத்துலகுக் கவிஞர்களும் பாரதியை, பாரதி கவிதையைப் போற்றுகின்றனர்.

இந்த உண்மைகளை உள்ளடக்கிய பார்ப்பராவின் கவிதையைத் தமிழில் தருகையில் கணேஷ் முதலாவது செய்யுளில் உள்ள சில வரிகளை வேறு ஒழுங்கில் அமைத்திருந்தால் நன்றாய் அமைந்திருக்கும்.

உதாரணமாக, ''சித்தாந்த உண்மைகளை முதலிற் கண்ட'' என்பதை ''சித்தாந்த உண்மைகளை முதலிற் கண்டாய்'' என்றும் ''உரம் பெற்ற கொடுங்கோன்மை எதிர்ப்புச் சின்னமாய் உருவான சிரஞ்சீவி புதிய ருஷ்யா தனை'' என்றும் அமைந்திருப்பின் நன்றாய் அமைந்திருக்கும்.

'ஆக்ரா நகர்' என்ற தலைப்பினிலே கணேஷ் தமிழாக்கியுள்ள கவிதையில் உயிரோட்டம் இருக்கிறது. ஒத்திசை இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தாஜ்ம

ஹாலே உருவாக்கிய உழைப்பாளிகளின் ஆற்றலைக் கவிஞன் வாழ்த்துகிறன்.

''வெண்பனி - வெம்மை நிறை தீம்பாலை வெட்கவைக்கும் தோற்றத்தில்'' என்றவரி கவித்துவமாய் வந்தமைந்துள்ளது.

'இந்திய நன்ஞட்டிற்கு' என்ற தலைப் புள்ள கவிதையிலே 'யாதும் ஊரே யாவ ரும் கேளிர்', 'எல்லோரும் ஓர்குலம், எல் லோரும் ஓரினம்' என்ற தமிழனின் உலகநோக் கைப் பெரிதும் வரவேற்று ருஷ்யக் கவி ஞன் பார்ப்பரா பாடுவதை கணேஷ் பின் வருமாறு தருகிருர்:

''இத்தகைய வெளிபரப்பில்
இருப்பவர் உள்ளத்தின்
சித்தத்தில் எழுகின்ற
சிந்தனையில் உதித்ததுவாம்
இத்தரையில் வாழ்மக்கள்
எல்லோரும் உறவென்ற
மெத்த பெரும் கொள்கையதும்
விதைத்தார்கள்''

அனடோலி பார்ப்பரா மேலும் ஒருபடி சென்று,

''வெளிநாடும்
எல்லையற்ற ஸ்டெப்பி வெளி
என்ஞட்டில் உள்ளதுபோல்
இன்ஞட்டில் கண்டிடவும்
இணைப்புதனை உணர்கின்றேன்''

என்கிருன்.

இந்த இணைப்பு வேறுபாடுகளிடையே ஒருமைப்பாட்டைக் காண்கிறது. இதே கவி தையில் வரும்,

''அங்கொன்று இங்கொன்ருய்
அமைந்துள்ளது சிற்றேரி
அவற்றுள்ளே காரெருமை காட்சிதரும்
பொட்டைபோல்'.

என்ற உவமையையும் ரசிக்கத்தக்கது.

குறிப்பிட்ட சூழலுக்குட்பட்ட எவரும் குறிப்பிட்ட விதத்தில் இயங்குபவர் என்ப தற்கு உதாரணமாய் செவ்வண்ணம் இன்பத் தையளிப்பதாய் சோவியத் சிறுமி கண்டு, கேட்டு, உண்டு உணர்ந்துள்ளாள். நம்மில் சிலருக்கோ பச்சை குளிர்ச்சி தருவதாய் இருக்கும். எனவே இது அவரவர் அனுபவத் தைப் பொறுத்துள்ளது.

''நற்செயல்'' என்ற செய்யுள் நமது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி போன்ற அறிவு நூல்களை நினைவுக் குக் கொண்டுவருகிறது. இதேபோன்ற 'அறிவுரை' என்ற முதற்செய்யுளும் அமைந் திருக்கிறது.

''உன் முகம்'', ''உன்னைக்குறித்த கவிதை'' ஆகிய இரண்டும் ஒருவிதத்தில் காதற்பாடல் என நாம் விபரிக்கமுடியும்.

''மழையும் மண்தரையும்'' என்ற கவி தையில் வரும் ''நனைந்தவொரு கடற்பறவை சிறகடித்துப் பறப்பதற்கு முடியாது தடுமா றும் நிலைபோல தமது உணர்வு தத்தித் தத் திச் செல்கிறது'' என்ற உவமையையும் ரசிக் கத்தக்கது. இதே கவிதையில் வரும்

''சொல்லைத் தொடர்ந்து
செயலின்றேல் — அப்பொழுது
பொய்யே ஆட்சி செய்யும்''

என்ற கருத்தும்,

''சொந்த நாட்டைவிட்டுப் பிரிக்கப்பட்ட கவிஞன் கவிஞனுவதில்லை'' என்ற கருத்தும் வரவேற்கத்தக்க சிந்தனைகள் எனலாம்.

''ஊழ்'', மலைப்பள்ளம் வாழ்மக்கள்'', ''குடை சேவா காட்சி'' ஆகிய மூன்று கவிதை களிலும் சொற் சிக்கனம் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்சிப் படிமங்கள், ஒருமுகப்படுத்திய செல் நெறி ஆகியன கட்டுக்கோப்பாய் அமைந் திருக்குமாயின், இவற்றை மேலும் நாம் ரசித்திருக்கலாம்.

மொத்தத்தில் இக்கவிதைத் தொகுப்பு மூலம் சோவியத் கவிஞர் ஒருவரின் ஆக் கத்திறனையும், எல்லைக்கோட்டையும் நாம் ஓரளவு அறிந்து கொள்கிரேம். பிறநாட்டு நல்லறிஞர் படைப்புகள் தமிழின் வளத்தை மேலும் மெருகுபடுத்தும்.

# மாக்ஸிச அணுகுமுறை

## சில குறிப்புகள்

சோ. கிருஷ்ணராஜா

மாக்ஸிச அணுகுமுறை பற்றிய விளக்கத்திற்கு முன் நிபந்தனையாக அதன் இரு அடிப்படையம்சங்கள் பற்றிய விளக்கத்தை தருதல் வேண்டும்

1. மாக்ஸிசம் ஒரு உலகநோக்கு
2. மாக்ஸிசம் ஒரு முறையியல்

உலகு பற்றியும், மனிதன் பற்றியும், உலகுடன் மனிதன் கொண்டுள்ள தொடர்புகள் பற்றியதுமான பார்வையே உலக நோக்கு என அழைக்கப்படும். மனிதனின் நம்பிக்கைகள் அனுபவம், இலட்சியம், விழுமியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தன்னைப் பற்றியும், சமூகம் பற்றியும், பொருளாதார அரசியல் நிலைப்பாடுகள், கலை, இலக்கியங்கள் பற்றியும் புரிந்து கொண்டதொரு முறையே உலக நோக்கமாகும்.

பொதுவாக உலகநோக்கை மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பார்ப்பதுண்டு.

1. நாளாந்த வாழ்க்கை விவகாரத்திற்குரிய உலகநோக்கு.
2. சமயம் சார் உலகநோக்கு.
3. தத்துவார்த்த உலகநோக்கு.

மனிதர் தம் வாழ்நிலையின் ஊடாகப் பெற்ற அனுபவத்தை ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கென்ற வகையில் கையளித்து வருகின்றனர். மரபுவழியாகக் கையளிக்கப்பட்ட இந்நம்பிக்கைகளே நாளாந்த வாழ்க்கை விவகாரத்திற்குரிய உலகநோக்காகும்.

இறைவனை உலகின் தொடக்கமாகக் கொண்டு உலகு பற்றியதும், தனிமனிதரின் ஆன்மீக நிலைப்பாடுகள் பற்றியதுமான கருத்துக்களைத் தருவது சமய நிலைக்குரிய உலகநோக்காகும். உணர்வு நிலைக்குரியதும் பகுத்தறிவிற்கு இசையாததுமான இவ்வுலகநோக்கு மனிதனின் ஆற்றாமை, இறப்பு பற்றிய பயம் என்பனவற்றின் அடியாகத் தோன்றுகின்றது.

தத்துவார்த்த நிலை நின்ற உலகப் பார்வையானது இயற்கை, சமூகம் என்பன பற்றி மனிதகுலத்தினால் ஈட்டப்பட்ட விஞ்ஞான அறிவடிப்படையாகத் தோன்றியதாகும். ஏனைய பிற தத்துவங்களின் உலக நோக்கிலிருந்து மாக்ஸிச உலக நோக்கு எவ்வாறு வேறுபடுகிறதென்பதை கால் மாக்ஸின் கூற்றுக்களிலேயே பின்வருமாறு கூறலாம். ''இதுவரை உள்ள மெய்யியலாளர்கள் அனைவரும் உலகை விளக்கினார்கள். ஆனால் உலகை எவ்வாறு மாற்றுவதென்பதே இங்குள்ள பிரச்சனை.''

மாக்ஸிச உலகநோக்கின் சாராம்சத்தைப் பின்வருமாறு இருவசனங்களிற் கூறலாம்.

1. பொருள்நிலைப் புரிந்து கொள்ளல்.
2. இயங்கியல் நோக்கு.

சமூகம் பற்றிய இயங்கியலடிப்படையிலான பொருள்நிலைப் புரிந்து கொள்ளல் மூன்று பிரதான மூலக் கூறுகளை உள்ளடக்கியது. அவை பிரித்தானிய அரசியற் பொருளாதாரம், பிரான்சிய கற்பனை சோசலிசம், ஜெர்மானிய தத்துவஞானம் என்

பனவாகும். பிரித்தானியரான ஸ்மித், றிக்காடோ போன்ற பொருளியலாளர்கள் விலைக்கோட்பாட்டை பொருள் உட்பத்திக்கான உழைப்புடன் தொடர்புபடுத்தி விளக்கினர். பிரான்சிய நாட்டவர்களான தோமஸ்மூர், சென்ட் இமோன் போன்றோர் கற்பனாவாத சோசலிச கருத்துக்களை முன் வைத்தனர். ஜேர்மானியரான கேகல் மாற்றமும், வளர்ச்சியும் பற்றிய இயக்கவியற் கோட்பாட்டை முன்வைத்தார். இவை மூன்றிலும் மூலக் கூறுகளை உள்ளடக்கி இயக்கவியற் பொருள் முதல்வாதம் என்ற கோட்பாடு மாக்ஸ், எங்கல்ஸ் என்பவர்களினால் முன்வைக்கப்பட்டது. பின்னாளில் லெனினின் பங்களிப்புடன் மாக்சிசம் என்ற தத்துவஞானக் கோட்பாடாக இது பரிணமித்தது.

இயக்கவியல் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையான மூலக்கூறு முரண்பாட்டுத் தத்துவமாகும். முரண்பாட்டுத் தத்துவம் மாற்றமும் வளர்சியும் என்ற இரு எண்ணக்கருக்களுடன் இணைக்கப்பட்டதே மாக்ஸிசம்.

## எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே?

*சாந்தோர் பெட்டோவ்: ஃ பி. / கங்கேரி*

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
கப்பியதோர் இருள் களைந்து
காலவெளி மலர்ந்ததென
எப்பொழுதோ சேவல்களும்
எழுப்பியது இன்னொலியும்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
சின்னஞ்சிறு சிட்டுக்களும்
சீர்துயிலும் கழித்தெழுந்து
தன்வயிறு நிறைப்பதற்கு
தாம் செல்லும் வயல் நோக்கி

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
சீரான பயிர்பச்சை
செடி செத்தை யாவினையும்
ஊராரின் குதிரைகளும்
உன்நிலத்தில் மேய்கிறது

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
உன்னண்டை வயல்காரன்
உன்வயலில் உள்நுழைந்து
தன்னெல்லை விரிப்பதனை
தானறிந்தும் தூங்குவதோ

"மெய்யியற் குறிப்புக்கள்" என்ற நூலில் தருக்கம், இயங்கியல், அறிவாராச்சியியல் என்ற மூன்றும் இணைந்ததே இயக்கவியற் பொருள் முதல்வாதத்தின் சிறப்பியல்பு என்கிறார். இச் சிறப்பியல்பே மாக்ஸிசத்தை ஒரு உலகநோக்காக மட்டுமல்லாது ஒரு முறையியலாக இருப்பதையும் உறுதி செய்கிறது.

விஞ்ஞானங்களிற்கான முறையியல் பற்றிய ஆய்வில் விடயம், விடயி என்ற பாகுபாட்டைச் செய்தல் மரபு, அறிவின் பொருளாயுள்ள புறஉலகு விடயம் எனப்படும். விடயி என்பது மனிதனின் சிந்தனைச் செயற்பாட்டைக் குறிக்கும். விடயம், விடயி என்ற இரண்டையும் அதாவது புறப்பொருள் உலகின் மாற்றம், வளர்ச்சியும், அவ்வுலகு பற்றிய அறிதற் செயற்பாடுகளும் இருவேறு ஆய்வு முறைகளினூடாக அணுகப்படாது, ஒரேவித முறையினூடாக அணுகப்படுவது மாக்ஸிசத்தின் பிறிதொரு சிறப்பியல்பாகும்.

---

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
அழகு நிறை மங்கையாராம்
அருமை மணித்திரு நாடே
அடுத்தவொரு யுகமதில்தான்
அறிதுயிலும் எழுவாயோ

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
கதிரவனும் புலர்ந்திட்டான்
கடுங்கதிர்கள் உன்னுறக்க
மதியுள்ளே ஊடுருவி
வலிவுணர்வு ஊட்டாதோ

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
பூனையதன் குட்டியுடன்
பொழுதெழுந்து உந்தன்பாற்
பானையதைச் சுற்றிவந்து
படுத்தமர்ந்து கால்நக்கும்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
முந்திரியின் தோட்டமதில்
முயலாது ஊழியனும்
தந்திரமாய்க் களஞ்சியத்தில்
தான் நுழைந்து குடிக்கின்றான்

எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே!
வீடுபற்றி எரியும்வரை
வீண்துயில் நீ போக்குவையோ!
பீடு மணி எச்சரித்தும்
பெருந்துயிலில் மூழ்குவையோ!

புறப்பொருள் உலகின் மாற்றம், வளர்ச்சி பற்றியும், சிந்தனையின் செயற்பாடுகள் பற்றியும் ஆராயும் ஒரு விஞ்ஞான ஆய்வு முறையே இயக்கவியலாகும். ஏங்கல்ஸ்சின் வார்த்தைகளிற் கூறுவதாயின் இயக்கவியல் என்பது எல்லாவகையான அசைவியக்கத்திற்குமுரிய மிகப்பொதுவான விதிமுறைகள் பற்றிய ஆய்வாகும். அதாவது இயற்கை, மனிதவரலாறு, சிந்தனை என்பனவற்றிற்குரிய அசைவியக்கம் பற்றியதாகும். இவ்வசைவியக்கமே எல்லா வகையான வளர்ச்சிக் கோட்பாட்டிற்கும் அடிப்படையாகும்.

விடயிக்குரிய இயக்கவியலென்பது விடயத்தின் பிரதிபலிப்பேயாயினும், அது சிந்தனையின் வடிவம், சிந்தனையின் உள்ளடக்கம் போன்ற அம்சங்களில் விடய இயக்கவியலிலிருந்து வேறுபடுகிறது சிந்தனையின் செயற்பாடு அரூபமான கருத்தாக்கத்திலிருந்து ஸ்தூலமான கருத்து என்ற வளர்ச்சியை நோக்கியும், அதன் மறுதலையாகவும் செயற்படுகிறது. இது புறப்பொருள் உலக இயக்கவியலிற் காணப்படாத சிறப்பம்சமாகும்.

மாக்ஸிச அணுகுமுறையானது சிந்தனையின் செயற்பாடு பற்றியதாகும். "மெய்யியற் குறிப்புகள்" என்ற நூலின் பிறிதோரிடத்தில் மாக்ஸிச அணுகுமுறையானது தற்சார்பற்ற தன்மை, பன்முகப் பார்வை, வளர்ச்சிக் கோட்பாடு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது என லெனின் குறிப்பிடுகிறார்.

லெனினுடைய இக்குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு மாக்ஸிச அணுகுமுறைக்கான பின்வரும் தத்துவங்கள் விருத்தி செய்யப்பட்டன.

## 1. பிரதிபலிப்புக் கோட்பாடு:-

மெய்யியல் ஆய்வில் முதல்நிலையானது, வழிநிலையானது என்றதொரு பாகுபாடு உண்டு. சடத்தை முதல்நிலையாகவும், அறிவை வழிநிலையாகவும் ஏற்றுக் கொள்ளும் மாக்ஸிசம், இதனடிப்படையில் பிரதிபலிப்புக் கோட்பாடு என்றதொரு தத்துவத்தை முன்வைக்கிறது. புற உலகின் பிரதிபலிப்பாகவே அறிவின் உள்ளடக்கம் இருக்கிறது. மனிதர் தம் தேவைக்கிணங்க புறஉலகை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமாயின், முதலில் புறஉலகை, அதன் இயல்பை அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதனால் அறிகையின் அடிப்படையாக இப்பிரதிபலிப்புக் கோட்பாடு இருப்பதுடன், மாக்ஸிச அணுகுமுறையின் ஆதாரமாகவும் இது உள்ளது.

## 2. செயல்வன்மைக் கோட்பாடு:-

புலஉலகு பற்றிய அறிவை மனிதன் பெறுவதற்கு உந்துசக்தியாக இருப்பது தன்தேவைக்கிணங்க புறஉலகை மாற்றியமைத்துக் கொள்வதே மனிதனின் இலட்சியமாகும். எனவே அறிவதை செயல்வன்மையும் அறிகைச் செயற்பாட்டின் முக்கிய அம்சமாக உளது. ஒரு விஞ்ஞானப் பிரச்சனையை அல்லது கலை - இலக்கியப் பிரச்சனையை ஆராய முயலுபவன் நோக்கலுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை, பிரச்சனையைத் தீர்க்கவும் முயலுகிறான். அதாவது பிரச்சனையின் சாராம்சத்தை அறிந்து புதிரைத் தீர்க்கவேண்டியது அவனது செயல்வன்மையினாலேயே சாத்தியமாகும். "இயக்கம்" பற்றிய நியூட்டனது கண்டுபிடிப்புக்களோ அன்றி ஒளி பற்றிய குவாண்டம் கொள்கையோ, வெறுமனே அனுபவத்தரவுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு பெறப்பட்டதல்ல, அவை பெறப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு கண்டு பிடிக்கப்பட்டவைகளாகும்.

## 3. பன்முகப்பார்வை:-

மாக்ஸிச அணுகுமுறையின் பிறிதொரு அம்சமாக இருப்பது பன்முகப் பார்வை என்ற தத்துவமாகும். பிரச்சனை ஒன்றை ஆராய முயலுபவர் அப்பிரச்சனையின் பல்வேறு பரிமாணங்களையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்று இத்தத்துவம் எடுத்துக் காட்டுகிறது. உதாரணமாக

தொடரும்

மேலே எறியப்பட்ட பொருள் ஒன்று கீழே விழும் பொழுது அதன்வேகம் அப்பொருளின் திணிவுடன் தொடர்பு கொண்டது. திணிவில் ஏற்படுகிற மாற்றம் வேகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும். ''உழைப்பு' பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் பொழுது அதனை உழைப்புக் கருவியுடன் தொடர்புபடுத்தியே ஆராய்தல் வேண்டும் உழைப்புக் கருவியில் ஏற்படும் மந்தம் உழைப்பின் தன்மையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இதேபோல தோற்றப்பாடுகள் அனைத்தும் தனித்தனியானவை அல்ல. அவை தம்முள் பல்வகைத்தான தொடர்புகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக மூலதனத்தை விளக்க வேண்டின் மனிதன் – பண்டம் – பணம் என்பனவற்றிற்கிடையிலான தொடர்புகள் விளக்கப்படல் வேண்டும். அத்துடன் உழைப்பிற்கும் - பண்டத்தின் உட்பத்திக்கும் - உற்பத்திக் காரணிகளின் உடமைக்குமிடையிலான தொடர்புகள் விளக்கப்படுதல் வேண்டும். இதுபோலவே குறிப்பிட்டதொரு தோற்றப்பாட்டை ஆராயுமொருவன் அதனை அதற்குரிய பல்வகைத் தொடர்புகளையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென பன்முகப்பார்வை என்ற தத்துவம் எடுத்துக் காட்டுகிறது.

## 4. தனியன்களிலிருந்து பொதுமைக்கும், பொதுமையிலிருந்து தனியனுக்கும் செல்லுதல்:-

அறிவின் வரலாற்றுரீதியான வளர்ச்சியானது தனியனிலிருந்து பொதுமைக்குச் செல்லுதல் என்ற முறையில் அமைந்துள்ளது பல்வேறு துறைகளிலும் காலத்திற்குக் காலம் பெறப்படும் புதிய அறிவானது தனியலகுகளாக ஆரம்பத்தில் தோன்றினும் அவையனைத்தையும் இணைத்து பொதுவானதொரு பார்வை இத்தத்துவத்தினால் பெறப்படுகிறது.

இதைவிட தனியன்களிலிருந்து பொதுமைப் பண்புகளை இனங்கண்டு கொள்ளவும் அவற்றைப் பிரித்து அறிந்து கொள்ளுதலும் தனியன்களிலிருந்து பொதுமைக்குச் செல்லுதல் என்ற இத்தத்துவம் உதவுகின்றது. விஞ்ஞான பூர்வமான அறிவை அனுபவநிலை, கோட்பாட்டு நிலை என்ற இரு பிரிவுகளை உடையது. அரிஸ்ரோட்டிலினால் உருவாக்கப்பட்ட உய்த்தறிதலும், பிரான்சிஸ் பேக்கனால் அறிமுகப்படுத்தப்பட்ட தொகுத்தறி முறையும் அனுபவநிலைக்குரிய அறிக்கை முறைகளாகும். இவ்வறிக்கை முறை அனுபவநிலையிலிருந்து கோட்பாடாக மாற்றம் பெற்று பொதுமைப்படுத்தப்பட்ட தத்துவம் உருவாதல் தனியன்களிலிருந்து பொதுமைக்குச் செல்லும் ஒரு வழிமுறையினாலேயே சாத்தியமாகிறது. ஆரம்பநிலையில் தெளிவற்றும், புரியாததுமான விடயங்கள் மீண்டும் மீண்டும் அவதானிக்கப்பட்டு மேலதிக தரவுகளைப் பெற்று பொதுக் கொள்கையாக மாற்றம் பெறுகிறது. இம்மாற்றத்திலிருந்து தனியன்கள் பற்றிய அறிவைப் பெறுவது பொதுமையிலிருந்து தனியனுக்குச் செல்லுதல் என்ற முறையினால் பெறப்படும்.

## 5. அளவு, பண்பு என்பவற்கிடையிலான பரஸ்பர தொடர்பு பற்றிய தத்துவம்:-

பொதுமையிலிருந்து தனியனுக்குச் செல்லுதல், தனியனிலிருந்து பொதுமைக்குச் செல்லுதல் என்ற அணுகுமுறையின் பிறிதொரு வடிவமாக இருப்பதே அளவு, பண்பு என்பவற்றிற்கிடையிலான தொடர்பாகும். வெப்பத்தின் அளவிற்கும், வெப்பமேற்றப்படும் பொருளின் பண்பிற்குமிடையிலான தொடர்புகள் பற்றிய பரிசோதனைகள் இங்கு குறிப்பிடத்தக்கன

ஒரு பொருளைப் பண்புரீதியாக வரைவிலக்கணப்படுத்தும் பொழுது அப்பொருளின் அளவையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென இத்தத்துவம் எடுத்துக் காட்டுகிறது கேகல் என்பவரால் முன்வைக்கப்பட்ட இத்தத்துவம் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையில் முறையியல் சார்ந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

# துணைக்கு வராத துப்பாக்கிகள்

வில்லியம் மெல்வின் கெல்லி/அமெரிக்கா

அவள் வாசலில் குத்துக் காலிட்டு அமர்ந்து கொண்டிருந்தாள். குட்டையான மஞ்சள் புற்களைச் சுற்றி ஒரு கடல் போல் இருந்த தூசிமண்ணை ஒரு பழைய பித்தளைக் கரண்டியினுல் கிளறிக் கொண்டிருந்தாள். சிவப்பும் வெள்ளையுமாகக் கட்டமிட்ட உடை, தோள்களிலிருந்து தொள தொள வெனத் தொங்கி, கால்களை மறைத்துக் கொண்டி ருந்தது.

இளவேனிற்காலம். அவள் கால்களில் ஒன்றும் அணிந்து கொண்டிருக்கவில்லை. அந்த லிபர்ட்டி தெருவில் குதிரை மீது வந்த அந்த மனிதனை அவள் இன்னமும் சரியாய் பார்க்க முடியவில்லை.

அவன் தோள்கள் சதுரமாக இருந்தன. மேலங்கி குதிரையின் பின் பகுதியில் பரந்து கிடந்தது. சேணத்துத் தோல் வாரில், தொங்கிய பயணப்பை, அவன் கால்களில் மோதிக் கொண்டு வந்தது. அவன் குதிரையிலிருந்து இறங்கினுன்.

அவன் மரக்கதவை திறப்பதையும், வாசலுக்குள் வருவதையும் அவள் பார்த்தாள். பரந்த தொப்பியின் விளிம்புக்குக் கீழே, இறுகி, கருகிப் போன முகத்தோடு அவன் அவளை குனிந்து உற்றுப்பார்த்தான்.

அவளுக்கு அவனைத் தெரியும். அவளது அம்மா அவனை திரு. ஹெர்டர் என்று கூப்பிடுவாள். அவள் ஜென்னியிடம் சொல்லி இருந்தாள். அவன்தான் அவளது அப்பா என்று.

கறுப்பு சூட்டும், கஞ்சிஇட்டு வெளுத்த சட்டையும், அழுத்தமான வண்ண உடையுமாக லிபர்ட்டி தெருவில் சவாரி செய்து வருபவர்களில் அவனும் ஒருவன். அந்தத் தெருவில் இப்படி வரும் ஒவ்வொரு மனிதனும் சென்று நுழைந்து கொள்ள ஒரு வீடு உண்டு. வெறும் பெண்களும், குழந்தைகளும் மட்டுமே அந்தத் தெருவில் வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் எல்லோரும் கறுப்பர்கள். சிலர் அட்டைகரி, பலர் கபிலைநிறம். அவர்கள் எல்லோரும் அழகிகள்.

ஜென்னியின் அம்மா ஒல்லியானவள். உயரமும், கரிய விழிகளும், தானே அதன் மீது அமர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நீளமான கூந்தலும் கொண்டவள்.

அங்கே ஜென்னியின் எதிரே நின்று கொண்டிருந்த மனிதன், அவள் வீட்டிற்கு வாரம்தோறும வந்து போய்க் கொண்டிருப்பவன். காலையில் விடிந்து பார்க்கிற போது அவன் ஒருநாளும் அங்கிருந்ததில்லை. அவன் உயரமும ஒல்லியுமாக, தங்கநிற கேசம் கொண்டவன். சிறிய தாடி முரட்டுத்தனமாக இருந்தது — அவளது கால்களுக்கு அடியில் இருந்த புற்களைப்போல. அவனது கண்கள் ஜென்னியினுடையதைப் போலவே நீல நிறத்தவை.

''ஜென்னி, நான் ஏன் இங்கு தங்குவதில்லை என்று நீ கேட்பதாக அம்மா சொல்கிருளே உண்மையா?''

அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆமாம். திரு. ஹெர்டர்.''

அவன் தாடைக்குக் கீழேயிருந்த தாடி, கன்னங்களில் இருப்பதைக் காட்டிலும் கறுத்து இருந்தன.

அவன் தலையைசத்தான். ''நான் இப்போது இங்கேயே தங்கப்போகிறேன். நீ போய் உன் அம்மாவை அழைத்து வா.''

ஜென்னி கரண்டியை மண்ணில் போட்டுவிட்டு, நீண்ட முற்றத்துக்குள் ஓடினுள்.

இதுவரை அவள் சூரிய வெளிச்சத்தில் இருந்ததால் வீட்டின் உட்புறம் இருட்டாகத் தெரிந்தது.

அம்மாவை அடுப்புக்கு அருகில் கண்டாள். அம்மாவின் நெற்றியில் வியர்வை மணிகள், கறுப்புப் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தாள்.

இடுப்பளவு பின்னல் தோளுக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருந்தது. ஜென்னி வருவதைக் கண்டு திரும்பினாள்.

''அம்மா, அந்த ஆளு — அதான் என் அப்பா, வாசல்ல இருக்கான். ஒரு பை கொண்டாந்திருக்கானே.''

முதலில் அம்மா புன்னகைத்தாள்; பின் முகஞ்சுளித்தாள்; பின் குழப்பமடைந்தாள்.

''பையா கண்ணே?''

''ஆமாம்மா.''

கூடத்தில் இருந்த கண்ணாடியில் கூந்தலைச் சரிசெய்து கொண்டு பயணப்பையை பார்த்தாள்.

''திரு. ஹெர்டர் அவர்களே''
அவன் அவர்களிடம் திரும்பினான்.

''இந்த முறை நான் உங்களை விட்டுப் போக மாட்டேன், என்ன வந்தாலும் சரி. இங்கே வந்துதான் ஒருவீடு என்றால் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நான் ஏன் அந்த வீட்டில் வாழ வேண்டும்?''

இந்த வினாவுக்கு அவனே பதில் சொல்வது போல தலையை ஆட்டிக் கொண்டான்.

''அதனாலே, நான் இங்கேயே தங்கப் போகிறேன். நான் அவளுக்கு அந்த வீட்டை கொடுத்து விடுகிறேன். பணம் அனுப்பி விடுகிறேன். ஆனால் இங்கேதான் தங்கப் போகிறேன்.''

அம்மா ஒரு கணம் திகைத்து நின்றாள்.

''சரி, இன்னும் அரைமணிநேரத்தில் சாப்பாடு மேசைக்கு வந்து விடும்.''

அம்மா கதவைத் திறந்தபோது அது ஓசை எழுப்பியது.

''ஓ'' அவள் கதவை விட்டுவிட்டு பயணப்பையை எடுத்துக் கொண்டாள்.

''நான் இதை உள்ளே கொண்டு போறேன்.''

அம்மா உள்ளே சென்றபோது புன்னகைத்ததை ஜென்னி பார்த்தாள்.

அன்று முதல் ஜென்னியின் அம்மா அந்த தெருவிலேயே மரியாதைக்குரியவள் ஆகிவிட்டாள். அந்தத் தெருவின் பெண்கள் நின்று அந்த மனிதனைப் பற்றி விசாரித்தார்கள்.

''அவர் இங்கே தங்குறது நல்லதா ஜோசி?''

''ஆமாம்.''

''இன்னும் உனக்கு ஒரு தொல்லையும் வரலையே!''

''இல்லே.''

''ரொம்ப நல்லது. நீ அவங்க வீட்டை உன்பேருக்கு எழுதி வாங்கிக்க. சிச்சி மார்க்கஸ் போல உன்கதை ஆயிடக்கூடாது. அவன் செத்த அன்றைக்கே அந்த வெள்ளைக்காரி வந்து அவளையும் அவள் குழந்தையையும் சாக்கடையில் தள்ளிவிட்டாள்.''

''நீ அந்த வீட்டை வாங்கி உன் பேரிலே போட்டுடு, புரியுதா''.

''சரி.''

''எப்படி இருக்கு இது, வித்தியாசமா இருக்கா?''

ஜென்னியின் அம்மா பிரகாசித்தாள்.

முதலில் ஜென்னிகூட ஆச்சரியப்பட்டாள். அந்த மனிதன் எல்லாக் காலை நேரங்களிலும் அங்கேயே இருந்தான். சில நேரங்களில் அவளைத்தூக்கத்திலிருந்துஅவன் தான் எழுப்பினான். அவள் அம்மா இப்போதெல்லாம் அவரை 'திரு. ஹெர்டர்' என்று கூப்பிடுவது இல்லை. சில சங்கடமான நேரங்களில், அரிதாகத்தான் என்றாலும், அவனிடம் 'முடியாது' என்றுகூட மறுக்கிறாள்.

இதற்கு முன்பெல்லாம் அவன் சொன்ன எதற்கும் அம்மா முடியாது என்று சொல்லி கேட்டதே இல்லை. அவன் ஜென்னியின் உண்மையான அப்பாதான் என்று அண்மையில்தான் திருப்தி அடைந்திருந்தாள்.

ஜென்னி அவனை அப்பா என்று கூப்பிடத் தொடங்கினாள்.

இப்போதெல்லாம் தினந்தவருமல் ஒரு வெள்ளைக்காரி அவர்கள் வீட்டுப்பக்கம் வரத் தொடங்கி இருந்தாள், அவள் யாரென்றும், அவளுக்கு என்ன வேண்டும் என்றும் ஜென்னிக்குத் தெரியவே தெரியாது. அந்த வெள்ளைக்காரி தனது சின்ன சாம்பல் நிற வண்டியில், புள்ளி விழுந்த குதிரை, புழுதியைக் கிளப்பிக் கொண்டு செல்ல, தெருக் கோடியில் திரும்பி அவள் வீட்டின் அருகில் மெதுவாகச் செல்வதை ஜென்னியால் பார்க்க முடிந்தது.

ஒரு நீக்ரோ, கறுப்புச் சீருடையில் கையில் கூடையுடன் வண்டியில் இருந்தான். வெள்ளைக்காரி முகவரியையோ அல்லது வேறு எதையோ தேடுவதைப்போல எட்டிப் பார்ப்பாள். சில வேளைகளில் ஜென்னியைக் கூட அவள் கவனிப்பாள். அந்த பார்வை இதமானதாக இருந்தது இல்லை. ஜென்னியைப் பற்றி ஏதோ கெட்டதாக நினைத்துக் கொள்வது போலக் கடினமான பார்வை.

ஒருநாள் அந்த சிறிய வண்டி நின்றது. வெள்ளைக்காரி முன்னால் குனிந்து வண்டிக்கார நீக்ரோவிடம் ஏதோ சொன்னாள்; ஒரு சிவப்பு உறையைக்கொடுத்தாள். அவன் வண்டியை விட்டு குதித்தான்;. மரக்கதவை திறந்து கொண்டு ஜென்னியைச் சட்டை செய்யாமல், கறுத்த பளபளப்பான முகத்துடன் வாசலை நெருங்கினான்.

அம்மா கைகளைத் துடைத்துக் கொண்டு வந்தாள். நீக்ரோ அந்த சிவப்பு உறையைக் கொடுக்க அவள் பெற்றுக் கொண்டாள். அப்போது அம்மா நீக்ரோவையும் தாண்டி, வண்டியையும், அதில் இருந்த வெள்ளைக் காரியையும் பார்த்தாள். வெள்ளைக்காரியின் பார்வை வெறுப்புடன் பேசியது.

நீக்ரோ திரும்பியபோது அம்மா உறையைப் பிரித்து உதடசையப் படித்தாள். அம்மாவின் விழிக்கடை பளபளப்பதை ஜென்னி பார்த்தாள். அந்த வாசலில் கறுப்புச் சட்டத்துக்குள் அம்மா நிலையாக நின்றாள்.

வெள்ளைக்காரி தன் இருக்கையில் சரியாக உட்கார்ந்து கொள்வதை ஜென்னி திரும்பிப் பார்த்தாள்.

பின் அவள் முன்னால் குனிந்து, ஜென்னியின் அப்பாவைப் போலக் கடினமாகக் கத்தினாள்.

''அவர் கிட்டே சொல்லு, அவருக்கு ஒரே ஒரு பெண்டாட்டிதான்னு. நீ வேறே தான்.'' அவள் மீண்டும் உள்ளே உட்கார்ந்து கொண்டாள், கையுறை அணிந்த கரம் அசைய சிறிய வண்டி மெதுவாக நகர்ந்து, வேகமாக ஓசையெழுப்பி தெருக்கோடியில் மறைந்தது.

ஜென்னி ஓடிச் சென்று கதவைத் தட்டினாள்.

''அம்மா''

''போய் விளையாடு ஜென்னி.''

இன்னமும் அந்த வண்டியும், வெள்ளைக்காரியும் நின்றிருப்பது போலவே, அம்மா அந்த இடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னமும் கடிதத்தைப் படிப்பது போல கையில் வைத்திருந்தாள். விழி ஓரங்கள் நனைந்திருந்தன. உள்ளே திரும்பிச் சென்று விட்டாள். திரைக் கதவு ஓசையிட்டது.

இரவு நேரங்களில் ஜென்னி, அப்பா வருவாரா என்று வாசல் கதவோரம் காத்திருக்கத் தொடங்கினாள். ஒரு நாள் திடீரென்று அவர் வராமல் போய்விடுவார் என்று கூட நம்பத் தொடங்கினாள். ஆனால் அப்பா ஒவ்வொரு இரவும் வந்தார். அவர் வராமல் போகக்கூடிய நாள் வராது என்றே தோன்றியது இருப்பினும் அவர் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அவள் ஆச்சரியப்பட்டாள்.

ஜென்னி, அப்பாவை பார்த்த போதெல்லாம் கைகளை பயத்துடன் தோளுயரம் மட்டுமே உயர்த்தி விரல்களை மட்டுமே அசைப்பாள். வேகமாக அசைத்தால் எங்கே மொத்த ஓவியமும் குலைந்து போய் விடுமோ என்பது போல கை அசைப்பாள். சித்திரம் போல் அமைந்த சிறகுகளை, எங்கே ஒரு மெல்லிய காற்று கூட சிதைத்து விடுமோ என்று பயந்தாள்.

அன்று இரவும் அப்பா வந்தபோது அவள் கையசைத்தாள். அவர் பதிலுக்குக் கையை தலைக்குமேல் உயர்த்தி வாழ்த்தியதைக் கண்டாள்.

''ஜென்னிக் கண்ணு, இன்றைய நாள் எப்படிக் கழிஞ்சுது?''

அவள் வேறுமனே புன்னகைத்தாள். வெள்ளைக்காரியை நினைவு கூர்ந்தாள்.

''ஒரு பொம்பளை அம்மாவை பார்க்க வந்தாங்க. ஒரு வண்டியிலே வந்து ஒரு கடிதம் கூட கொடுத்தாங்க, அவங்க அம்மாவை அழவச்சுட்டாங்க.''

அவர் புன்னகை மறைந்தது. நாக்கை கோபத்தில் உறிஞ்சிக் கொண்டார்.

''வா, என்ன ஆச்சுன்னு பார்க்கலாம்'', அவள் கைகளைப் பிடிக்கத் தாவினார்,

அம்மா சமையல் அறையில் இருந்தாள், அழுத்தமாகக் கால்களைப் பதித்து உலவிக் கொண்டிருந்தாள், அந்த சிவப்பு உறை மேசை மீதிருந்தது.

அம்மா இருவரையும் நோக்கித் திரும்பினாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. நிறைய மயிர்க்கற்றைகள் முகத்தில் விழுந்தன. மூக்கை உறிஞ்சிக் கொண்டு கடிதத்தைக் காட்டினாள்.

அப்பா ஜென்னியின் கையை விட்டு விட்டு கடிதத்தை படித்தார். படித்து முடித்ததும் கொண்டுபோய் நெருப்பில் போட்டார். குப்பென்று ஒரு புகைக்காற்று அடுப்பிலிருந்து எழுந்தது. அவர் தலையை அசைத்துக் கொண்டார்.

''ஜோசபைன், அவள் என்னைத் திரும்பிப்போக வைக்க முடியாது.''

அம்மா மரநாற்காலியில் வேகமாக விழுந்து மீண்டும் அழத்தொடங்கினாள்.

''ஆனால் அவள் வெள்ளைக்காரி ஆயிற்றே, மேனார்ட்''

அப்பா ஒரு பாதிரியைப்போலவோ, அல்லது கோபமடைந்த ஒரு ஆசிரியரைப் போலவோ தன் புருவங்களை உயர்த்தினார்.

''உன்னுடைய தோல், அதைக்காட்டிலும் வன்மையானது''

''என்னுடைய தாய் ஒரு அடிமை ஆயிற்றே.''

அப்பா விரல்களை மடக்கி, காற்றில் ஒரு குத்து விட்டார்.

''உன் தாயார், தான் ஒரு அடிமையாக இருக்க வேண்டும் என்று கேட்டு அதனைப் பெறவில்லை.''

பின் அவர் அவளுக்குப் பின்னால் சென்று முதுகில் சாய்ந்து கொண்டு அமைதியாகச் சொன்னார்.

''யாரும் என்னைத் திரும்பிப் போகச் செய்ய முடியாது.''

''அவள் சொல்வதைச் செய்யுமாறு பிறரை ஏவ முடியுமே'' அம்மா தன் பார்வையை ஜென்னியின் மீது ஓடவிட்டாள். ஆனால் அதை உடனே வேறு பக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

''போருக்குப் பிறகு நீங்கள் இங்கே இருக்கவில்லை, நான் இருந்திருக்கிறேன், வயல்களில் இருந்த நீக்ரோக்களுக்கு என்ன நடந்தது என்பதை நான் பார்த்திருக்கிறேன்.''

அவர் அம்மா முகத்தை கையில் ஏந்திக் கொண்டார். ''மேனார்ட் நீங்கள் போய் விடுவது நல்லதாகக்கூட இருக்கலாம்.''

''நான் போகிறேன் — பிணமாக! கேட்கிறதல்லவா? பிணமாக, இந்தக் குழந்தை

கள். இந்த முகமூடி அணிந்த பயந்த குழந்தைகள் என்னை அசைக்க முடியாது. நான் பிணமாகத் திரும்பிப் போகிறேன். இதோடு விட்டுவிடு, விவாதம் தேவையில்லை.''

அவர் போய்விட்டார். இடி முழக்கத்துடன் முற்றத்தைக் கடந்து, மாடிப்படியின் அருகில் இருந்த மேசையில் இடித்துக் கொண்டு அவர் மாடிக்குச் சென்று விட்டதை ஜென்னி செவியுற்றாள்.

அம்மா அவளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். முன்பு இருந்ததைக் காட்டிலும் அவள் கண்கள் சிவந்திருந்தன. உதடுகள் துடித்தன. கரங்கள் தொடையின் மீது கிடந்தன.

''ஜென்னி.''

''என்ன அம்மா?''

அவள் அம்மாவின் கண்களைப் பார்த்தபடி ஓரடி எடுத்து வைத்தாள்.

''ஜென்னி, நீ எனக்கொரு வாக்குறுதி கொடுக்கவேண்டும். அதை மறக்கவே கூடாது.''

''சரியம்மா''. அவள் அம்மாவின் மடியில் இருந்தாள்.''

அம்மாவின் கரங்கள் ஜென்னியின் தோளைப்பற்றின,

''ஜென்னி, நீ வளர்ந்த பிறகு பெரிய அழகியாக இருப்பாய். உனக்குத் தெரியுமா அது? அப்போது நீ நிச்சயமாக இங்கிருந்து வடக்கே போய் விடுகிறேன் என்று வாக்குறுதி கொடு. உனக்குப் பதினெட்டு வயது நிரம்பும்போது, நான் இங்கில்லை என்றால், நீ வடக்கே போய் அங்கேயே திருமணம் செய்து கொள்கிறேன் என்று எனக்குச் சத்தியம் பண்ணிக்கொடு. புரிந்ததா?''

ஜென்னிக்கு இதுபற்றி உறுதி எதுவும் இல்லை. வடக்கு என்பது என்ன என்பதே தெரியாது. வடக்கே குளிர் அதிகம் என்றும், வானிலிருந்து வெண்மையான துகள்கள் விழும் என்றும் தெரியும். தனக்குப் பதினெட்டு வயது ஆகிறபோது அம்மா தன்னுடன் இல்லை என்பதை நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. ஆனால் அம்மா அதை புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறாள் என்று தெரிந்து கொண்டாள். எனவே பொய் சொன்னாள்.

''செய்கிறேன் அம்மா.''

''நான் சொன்னதை திருப்பிச்சொல் பார்க்கலாம்.''

அவள் திருப்பிச் சொன்னாள்.

அம்மா முதன்முறையாக அவள் உதட்டில் முத்தமிட்டாள்.

---

☐ *''மக்களின் ரசனையை விமர்சனமின்றி ஏற்றுக்கொண்டு அவர்களைத் திருப்திப்படுத்த முயற்சிப்பது என்பது அவர்கள்மீது உங்களுக்கு எந்த மரியாதையும் இல்லை என்பதையே குறிக்கும். நீங்கள் அவர்கள் பணத்தில் மட்டுமே குறியாக இருக்கின்றீர்கள். விழிப்புணர்வு ஏற்படுத்தும் கலைப்படைப்பைத் தந்து அவர்களைப் பயிற்றுவிப்பதற்குப் பதிலாக, கலைஞனின் வருமானத்தைப் பற்றியே திட்டமிடுகின்றீர்கள். மக்களும் அவர்கள் பங்குக்கு தாங்கள் உணர்வதே சரியென்ற கலப்படமில்லாத திருப்தியுடன் இருந்துவிடுவார்கள். நமது தீர்ப்புகளின் பேரில், விமர்சனம் கூறும்படி மக்களின் திருப்தியை வளர்க்கத் தவறுவது அவர்களை அக்கறை இல்லாமல் நடத்துவதற்கு இணையானது''.*

☐ அந்த்ராய் தார்க்கோவ்ஸ்கி

---

சமையல் அறையிலிருந்து அவர்கள் குரல் கேட்டது. அப்பாவின் குரல் உயர்ந்தும், கண்டிப்பாகவும் இருந்தது. அவர் ஏதோ முடிவெடுத்துவிட்டு அதை வற்புறுத்துகிறார் என்று தெரிந்தது. அம்மா அவர் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டிருந்தாள்.

அன்று, ஜுலை 4ந் தேதி, துப்பாக்கி சுடும் போட்டி நடைபெறும் நாள்.

ஜென்னி தனது ஞாயிற்றுக்கிழமை உடையில் இருந்தாள், படியிலிருந்து இறங்கி வரும்போது அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

''மேஜனார்ட், அவளை அழைத்துப் போகா தீங்க''

அம்மா ஆவேசமாக இருந்தாள்.

''உங்களிடம் பிச்சை கேட்கிறேன். குழந்தையை இன்று அழைத்துப் போகா தீங்க.''

''நான் அவளை அழைத்துப் போகப் போகிறேன். முகமூடி அணிந்த அந்த கோழைகளை.........''

அவர்கள் எதுபற்றி பேசிக்கொண்டிருக் கிறார்கள் என்பது ஜென்னிக்குப் புரிந்து விட்டது. அப்பா அவளை துப்பாக்கி சுடும் போட்டிக்கு அழைத்துச் செல்வதாக இருந் தார். ஆனால் ஏதோ காரணங்களினால் அவளை அழைத்துச் சென்றால் தொல்லைகள் வரலாம் என்று அம்மா நினைத்தாள். ஆனால் அம்மா ஏன் அப்படி நினைக்கிறாள் என்பது ஜென்னிக்குப் புரியவில்லை. ஒருவேளை தினந் தோறும் வண்டியில் வந்து கொண்டிருக்கும் வெள்ளைக்காரியோடு இது சம்பந்தம் உடை யது என்று நினைத்தாளோ என்னவோ! ஒருவேளை அந்த வெள்ளைக்காரி வரும்போது தனியாக இருக்க பயப்படுகிறாளோ என் னவோ! இரண்டு மாதத்துக்குப் பிறகு அந்த கடிதத்தை கொடுத்துவிட்டு போய்விட்ட பிறகும்கூட அந்த வண்டி வந்து கொண்டி ருந்தது.

பின்னர் பல விநோதமானவை நடந் தன. எப்போதும் போலவே ஜென்னியும், அம்மாவும், அசிங்கமான சட்டைகளும், பெரிய வைக்கோல் தொப்பிகளும் அணிந்த கறுப்பர்கள், பளிச்சிடும் கடைகளில் பச்சை யும், மஞ்சளுமான காய்கறிகளையும், சிவப்பு செங்கற்களைப் போன்ற இறைச்சி யும் விற்றுக் கொண்டிருக்கும் கடைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால் இப் போதெல்லாம் அப்படிப் போகிறபோது, கடைத்தெரு அமைதியாகி விடுவதையும், கும்பல் கும்பலாக வெள்ளைக்காரர்கள் அவர் களை கவனிப்பதையும், சிலநேரங்களில் வெடிச்சிரிப்பு சிரிப்பதையும், நீக்ரோக்கள் கண்களில் பயத்துடன் பார்வையை திருப் பிக் கொள்வதையும் ஜென்னி கவனிக்க லானாள்.

ஆனால் நல்ல உடை அணிந்த வெள் ளைக்காரிகள்தான் ஜென்னியை அதிகம் பய முறுத்தினர். ஜென்னியையும், அம்மாவை யும் தனக்கு ஏதோ தனிப்பட்ட முறையில் கேடு இழைத்து விட்டது போன்று கோப மாகப் பார்ப்பார்கள். காலையில் தினத்தோ றும் வண்டியில் வரும் வெள்ளைக்காரிதான் இவர்களாக வந்திருப்பது போலத் தோன் றும்.

ஆனால் ஜென்னியின் அம்மா, கருமை யாகப் பளபளக்கும் தன் இடுப்பளவு கூந் தலை, கொண்டை இட்டுக் கொண்டு, அப்பா கவனியாமல் நடப்பதுபோல நடப் பாள்.

இப்போதெல்லாம், அம்மா வெளியே காலடி எடுத்து வைப்பதே இல்லை. சாமான் களை ஒரு நொண்டி நீக்ரோ பையன் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந் தான். அன்று காலை, ஜென்னியும், அப்பா வும் வீட்டை விட்ட போது அந்த நொண்டி எதிரில் வந்தான்.

''வணக்கம் திரு. ஹொர்டர் அவர் களே. துப்பாக்கி சுடும் போட்டியில் நல்ல வெற்றி வரட்டும்.''

கிழிந்த தொப்பியை கழற்றிச் சிரித் தான். அப்பா தலையசைத்தார். ''நன்றி, ஃபெலிக்ஸ், என்னால் ஆனதை முயல் கிறேன்.''

''நிச்சயம் நீங்கள் வெல்வீர்கள்.''

அப்பாவின் கையோடு தன் கை இணைத்து, ஜென்னி தெருவில் நடந்தபோது, லிபர்ட்டி தெருவில் சன்னல் திரைச்சீலை வழி யாகப் பலர் அவர்களைப் பார்த்தனர்.

பட்டணம் பழைய மாதிரி இல்லை. கொடிகளும், தோரணங்களும் நிறைந்திருந் தன. மக்கள் தங்களிடமிருந்த மிக நல்ல ஆடைகளை அணிந்திருந்தனர்.

சதுக்கத்தில் கயிறுகட்டி, மேடை அமைக்கப்பட்டு, புதிய மர்செய் வீதி சுத் தம் செய்யப்பட்டு இருந்தது.

சாலையிலிருந்து மிகவும் தள்ளி பஞ்சு மூட்டைகள் வரிசையாக நின்றன. அவற்றின் மீது மெழுகுத் துணிகளில் துப்பாக்கி சுடும் இலக்குகள் பொருத்தப் பட்டிருந்தன. பலர், அப்பாவின் தோளில் தட்டினார்கள். அவனை சோதனை செய்யும் பாவனையில் திருட்டுத்தனமாகப் பார்த்தார்கள், பெரும்பாலும் அவளை அசட்டை செய்தனர். அன்றைய புகழ்மனிதன் அப்பாதான். அம்மாவைப் போல இல்லாமல் அவர் எல்லோருக்கும் தெரிந்தவராக இருந்தார். எல்லோரும், அவரே வெற்றி அடைவார் என்று நம்பினார்கள். மாநிலத்தின் சிறந்த துப்பாக்கி சுடுபவர் அவர்தான்.

எல்லோரும் சுட்டபின்னர், நடுவர் கைகளை ஆட்டியபடி ஓடிவந்தார். ''மேனார்ட் ஹெர்டர், ஆறு துப்பாக்கி சூடுகள்தான். நீங்கள் எல்லோரையும் ஒரு கொத்து எச்சிலில் சமாளித்து விடுவீர்கள்.''

அவர் அப்பாவின் தோள்களைப்பற்றி மேடைக்கு அழைத்துச் சென்றார். அங்கே நரைத்த தலையும், தாடியுமாக ஒரு கிழவர் காத்திருந்தார். ஜென்னி அப்பாவுடனேயே படிகளில் ஏறினாள்.

பெண்மணிகள் பலர் ஜென்னியை, அவள் அம்மாவை பார்ப்பது போல பார்க்கத் தொடங்கவே, அவள் தொடர்ந்து செல்லத் தயங்கினாள்.

அந்தக் கிழவன், ஆழமான குரலில் கற்கள் உராய்வது போன்ற ஓசையுடன் ஒரு சின்ன உரை நிகழ்த்தினான். பின்னர் நீல வெல்வெட் பெட்டியில் வைக்கப்பட்ட வெள்ளிப் பதக்கம் ஒன்றை அப்பாவுக்கு வழங்கினார்.

அப்பா திரும்பி, ஜென்னியைப் பார்த்து முறுவலித்தார். அவள் அப்பாவை நோக்கி படிக்கட்டில் ஏறத் தொடங்கினாள். அதே நேரத்தில் கிழவர் அப்பாவின் தோள் மீது கையைப் போட்டார்.

மக்கள், சதுக்கத்தை விட்டு கலையத் தொடங்கினார்கள். அதே நோத்தில் கிழவர் அப்பாவிடம் சொன்ன சொற்களை அவளால் கேட்க முடியவில்லை.

அப்பாவின் முகம், கடிதம் வந்த அன்று எப்படி இறுகிப் போனதோ, அதே போன்று இப்போதும் இறுகிப் போனது, பாதி படியேறிய அவள் நின்றுவிட்டாள்.

கிழவர் மேலும் தொடர்ந்தார்:

''உனக்குத் தெரியும், நான் எதிலும் தலையிடுபவன் அல்ல. லிபர்ட்டி தெருவைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். நானே அங்கே ஒரு பெண்ணை வைத்திருந்தேன், போருக்கு முன்னால்''

''எனக்கு அது தெரியும்,'' உதடுகள் பிரியாமல் சொற்கள் அப்பாவிடமிருந்து வந்தன.

''ஆனால் மேனார்ட், நீ செய்வது வித்தியாசமானது. இவள் உன்னுடைய சொந்த மகள்...... அதனால்தானே என்னவோ...,'' கிழவன் கீழே இருக்கும் பஞ்சுப்பொதிகளையும், துப்பாக்கி சுடும் குறியையும் நோக்கினார்.

''ஆனால் இவள் ஒரு நீக்ரோ. இப்போது மக்களின் பேச்சு அசிங்கமாக இருக்கிறது. காது கொடுத்து கேட்க முடியவில்லை.''

அப்பா கோபத்தில் முணுமுணுத்தார்.

''நான் அந்த துப்பாக்கி சுடும் குறியை என்ன செய்வேன் என்று உங்களுக்கு தெரியும். என் வீட்டையோ, என் மகளையோ நெருங்கும் எந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் அதையே செய்வேன் என்பதை முகமூடி அணிந்த அந்த கோழைகளுக்குச் சொல்லி விடுங்கள்.''

''மேனார்ட், அவர்கள் அவர்களுக்கு ஏதேனும் செய்துவிட்ட பிறகு இவற்றால் எந்தப் பயனும் இல்லை.''

கிழவன் நிறுத்திவிட்டு ஜென்னியைப் பார்த்து முறுவலித்தான்.

''அதோ, அவள்தான் எனது ஒரே பேத்தி.''

அவன் கண்கள் அவளை நோக்கிச் சிமிட்டப்பட்டன.

''நீ துப்பாக்கிகளைக் கையாளத் தெரிந்தவன். நீ ஒரு துப்பாக்கி வீரன். எனக்கும் துப்பாக்கி வித்தை தெரியும். துப்பாக்கிகள்

நிறைய காரியங்களைச் செய்யும், ஆனால், அவை நல்ல மருத்துவர்களை உண்டாக்க முடியாது. அவளை விட்டுவிடுமாறு யாரும் உன்னிடம் சொல்லவில்லை. வெறுமனே நீ உன் வீட்டிற்கு போ. உன் மனைவியிடம் திரும்பிவிடு.''

அப்பா வேகமாகப் படியிறங்கி வந்து ஜென்னியின் கைகளைப் பற்றினர். வெள்ளை வெளேரென்ற சட்டை காலருக்கும், வைக்கோல் நிற மஞ்சள் கேசங்களுக்கும் இடையில் அவரது முகம் இரத்தச் சிவப்பாகியது.

சில கட்டடங்கள் கடந்து அவர்கள் மெதுவாக நடந்தார்கள். பல பெஞ்சுகளின் மீது பசுமையான மரங்கள் குளிர் நிழல் பரப்பிக் கொண்டிருந்த பூங்காவினுள் நுழைந்தனர்.

'நாம் உட்காரலாம்.''

அவள் அப்பாவுக்கு பக்கத்தில் சங்கடத்துடன் முறுக்கிக் கொண்டு உட்கார்ந்தாள்.

மெக்சிக்கோ வளைகுடாவிலிருந்து உப்பு வாசனை வீசும் சூடான காற்று வீசியது. இலைகள் சோகமாக, மெதுவான பறையொலிகள் போல் சலசலத்தன. அப்பா கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார்

புற்களில் குருவிகள் புழுத்தேடிக் கொண்டிருந்தன, சிலையின் தொப்பிக்கு மேல் கடற்காக்கை ஒன்று பாய்ந்து பறந்து, ஒரு கூரைக்குப்பின் மறைந்தது.

அதே நேரத்தில்தான் தெருவுக்கு அப்பால நின்று கொண்டு ஒரு வெள்ளைக்காரன் அவளைப் பார்த்து சிரிப்பதை அவள் கண்டாள். அவனுடன் வேறு வெள்ளையர் சிலரும் அவளையும், அப்பாவையும் பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளைக்காரன் ஜென்னியிடம் கைகளை ஆட்டினான். விலகி இருக்க வேண்டியவர்கள் என்று அம்மா சொல்லும் மனிதர்களில் ஒருவன்போல அவன் இருந்த போதிலும், ஜென்னி புன்னகைத்தாள்.

அவன் எந்த ஏழை நீக்ரோவைக் காட்டிலும் கேவலமாக உடை அணிந்திருந்தான் அவனது முதுகுக்குப் பின்னால் இருந்து கோணியில் செய்த பொம்மை ஒன்றை எடுத்தான். பொம்மையின் கால்களைப் பற்றிக்கொண்டு இடையில் கிழியுமாறு அதனை இழுத்தான். இரு கால்களுக்கிடையில் இருந்த கிழிசலில் தன் விரலை வேகமாக நுழைத்தான். மற்றவர்கள் உரக்கச் சிரித்தனர்.

ஜென்னி. அப்பாவின் சட்டையைப் பற்றி இழுத்தாள்.

''அப்பா, அவன் என்ன செய்யறான்?''

''யார்?'' அவள் அப்பா திரும்பினர்.

அவன் அதையே மீண்டும் செய்தான்.

அப்பா எழுந்து நின்று கத்தினர்.

---

☐ *''ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சாராம்சத்தில் மனிதத்துவமானதும், நிரந்தரமானதுமான அம்சத்தைப் பிரதிபலிக்கத் தூண்டுவதே என்னுடைய கடமை. மனிதனின் விதி அவன் கைகளிலேயே அடங்கியிருக்கிறது. ஆனால் அவன் பேய்களைத் துரத்திக்கொண்டு ஓடுவதிலும், சிலைகளுக்கு வணக்கம் செய்வதிலும் மூழ்கியிருக்கின்றான். ஒரு மனிதன் தன் இருத்தலில் செய்யக்கூடியது என்னவென்பதை ஒரே அம்சத்திற்குச் சுருக்கிவிடலாம். நேசிப்பதற்கான வழிகாட்டி. அந்த அம்சம் ஆன்மாவுக்குள் வளர்ந்து மனித வாழ்க்கையின் அர்த்தத்தையே நிர்ணயிக்கும் மகத்தான உண்மையாக மாறும். எனது படங்களைப் பார்க்கும் எவரிடமிருந்தும், அன்பின் தேவையை, அன்பை வழங்குவதன் தேவையை, அன்பின் அழைப்பை உணரச் செய்யவேண்டும் என்பதே எனது கடமை'.*

☐ அந்த்ராய் தர்க்கோவ்ஸ்கி

---

''நான் உங்களை சுட்டுடுவேன், இதற்காக நான் உங்களை சுட்டுக் கொன்னுடுவேன்.''

அவன் மகிழ்ச்சியோடு உரக்கக் கத்தினான்.

கால்களை உயரத் தூக்கிக் கொண்டு ஒரு குதிரையைப் போலத் துள்ளி ஓடினுன்.

அப்பா மீண்டும் சிவந்து போனுர். கை விரல்களை மூடி இறுக்கினுர். அவரது கைகள் மீன்களின் அடிப்புறத்தைப் போல விறைத் துப்போயின. பெருமூச்சுவிட்டு, தலையை அசைத்து, கீழே உட்கார்ந்தார்.

''நான் எல்லோரையும் கொல்ல முடியாது.''

மீண்டும் தலையை எதிர்மறையாக அசைத்தார்.

முன்னுல் குனிந்தார். வெள்ளிப் பதக்கம் வைத்த நீல வெல்வெட் பெட்டியை அவள் கைகளில் திணித்தார், அது அவரது கைகளினுல் சூடேறி, வியர்வையில் நனைந்து, முள்ளாகக் குத்தியது.

''நீ வளர்ந்த பிறகு, உன் அம்மா சொல்வதுபோல வடக்கே சென்றுவிடு. இதை உன்னுடன் கொண்டுபோ. நான் உனக்காக இதைக் கொடுத்தேன் என்று எப்போதும் நினைவில் வைத்துக்கொள்.

அவள் எழுந்தாள்.

''நீ தனியாக வீட்டுக்குப் போ. அம்மாவிடம் சொல், நான் பிறகு வருகிறேன் என்று.''

அன்று இரவு, அவர் வீட்டிற்கு வரும் வரையிலும், அவரது காதோரகேசம் அவள் கன்னங்களில் உராயுமாறு முத்தமிட்டு இரவுவாழ்த்து சொல்லும் வரையிலும் ஜென்னி விழித்திருக்க முயன்றுள். ஆனுல் திடீரென்று சூரியன் பளபளத்தான்.

வெளியில், சாலையில் வண்டிகள் புழுதி எழுப்பிக்கொண்டிருந்தன. இருவரும் சாப்பிட்டபோது அம்மா மௌனமாக இருந்தாள்.

காலையுணவை முடித்துக்கொண்டு, ஜென்னி வாசலுக்குப் போய், தினந்தோறும் போகும் கறுப்பு வண்டி வருகிறதா என்று பார்த்தாள்.

அந்த காலை வேளையில், பலமாதங்களுக்குப் பிறகு, முதன் முறையாக, அந்த வெள்ளைக்காரி யாருக்காகவோ, அல்லது வேறு எதற்காகவோ வீட்டை எட்டிப் பார்த்துக் கொண்டு அந்த வழியாக வண்டியில் குலுங்கிச் செல்லவில்லை.

---

## புதுமையில்லை!

*தேவிபரமலிங்கம்*

*கடையால்*
*வீடு திரும்புகையில்*
*வீதி நெடுகலும்*
*மின் கம்பங்களில்*
*கட்டப் பட்டிருக்கும்*
*வாழை மரங்கள்*
*அச்சத்தைத் தருகின்றன!*

*அவ்வப்போ*
*கண்டிருந்த*
*தண்டனையின் சின்னங்களும்*
*இப்படித்தான்!*

*படையினரும்*
*மின்கம்ப மறைவுகளில்*
*நின்றிருப்பர்*
*அவ்வாறே!*

*இருட்டுக்கு வெளிச்சம்*
*பிரியா விடை*
*தெரிவிக்கும் நேரத்தில்*
*கடையால்*
*வீடு திரும்புகையில்....*

திரு. ஐ. விஸ்வலிங்கம்

# மரச்செதுக்குச் சிற்பங்கள்

*சசி கிருஷ்ணமூர்த்தி*

அண்மையில், யாழ் பல்கலைக்கழகத்தில் ஒரு சிற்பக் கண்காட்சியைக் காணும் வாய்ப்புப் பலருக்கும் கிட்டியது. பெரும்பாலும் மரச்செதுக்குச் சிற்பங்களைக் கொண்ட இத்தகையதொரு கண்காட்சி தமிழ்ப் பகுதியில் நடைபெற்றது இதுதான் முதல்முறை என்று சொல்லாம். ஐயாத்துரை விஸ்வலிங்கம் என்ற சிற்பக் கலைஞரது இக்கண்காட்சியை யாழ் பல்கலைக்கழகக் கலைவட்டம் ஒழுங்கு செய்திருந்தது. பல்வேறு அளவிலான ஏறக்குறைய 50 க்கு மேற்பட்ட சிற்பங்கள் (31 தலைப்புக்களில்) காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. நம்மத்தியில் கலைசார்ந்த நடவடிக்கைகளில் இதையொரு முக்கிய நிகழ்வாகத்தான் கொள்ள வேண்டும்.

மரச்செதுக்கு சிற்பவேலைப்பாடென்பது ஒரு தொழில் சார்ந்த கைவினை என்ற அளவிலேயே நம்மத்தியில் இருந்து வந்துள்ளது. ஆயினும் அதையொரு அக உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய, படைப்பாற்றல் கொண்ட கலையாக நம்மத்தியில் அறிமுகப்படுத்தியுள்ளவர் ஐ. விஸ்வலிங்கம். 1950 களில் ஒரு சிற்பக் கலைஞராக இலங்கையின் கலைத்துறைக்கு அறிமுகமாகிய இவர் இப்பொழுதுதான் தமிழ் மக்களிடையே அறிமுகமாகியிருக்கிறார். இதற்கு இவர் நீண்ட காலம் கண்டியில் வாழ்ந்தமையையும், தென்னிலங்கைவாழ் கலைஞர்களோடு மட்டுமே பெரும்பாலும் இவர் தமது கலைத் தொடர்பினை வைத்திருந்தமையையும் காரணங்களாகக் கூறிக்கொள்ளலாம்.

தென்னிலங்கைக் கலைச்சூழலில் பாதிப்பைச் செலுத்திய, சர்வதேச ரீதியில் அறியப்பட்ட ஜோஜ் கீற் போன்றவர்கள் அங்கம் வகித்த '67 குழு' வுடன் இவர் தொடர்பு கொண்டிருந்தார். இக்குழுவின் உதவியுடன் இவரது கலைப் படைப்புக்களின் கண்காட்சிகள் இலங்கையின் பல பாகங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டன 1984ல் நடைபெற்ற இலங்கையில் கலைச்சங்கத்தின் ஆண்டுக் கண்காட்சியில் இவரது 'பிக்கு', 'மீனவன்' ஆகிய சிற்பங்கள் முறையே 1ம், 2ம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கண்டிவீதிளில் வரும் யானைகள், மேளகாரர்கள், நடனக்காரர்கள் புதிய பரிமாணங்களில் சித்தரிக்கப்பட்ட 'எசல பெஉபறரா' என்ற இவரது சிற்பங்கள் கண்டி குயின்ஸ் ஹோட்டலில் உள்ளதாக அறியமுடிகின்றது.

பெரும்பாலும் மரத்தையே ஊடகமாகக் கொண்ட ஐ. விஸ்வலிங்கம் கிடைக்கும் மரத்தின் தன்மைக்கேற்பவும், தனது கற்பனை வளத்துக்கேற்பவும் சிற்பங்களை வடிக்கின்றார். பெரும்பாலும் பகுதி அரூபத் தன்மை கொண்டவை இவரது கலைப்படைப்புக்கள். நீண்டகாலம் சிங்களக் கிராமங்களில் வாழ்ந்ததாலும், சிங்களக் கிராமிய கலைகளோடு கொண்ட தொடர்புகளாலும் இவரது படைப்புக்கள் பெரும்பாலும் நயக்கு அந்நியமாகப்படுகின்றன. இருந்தாலும் இவரது வெளிப்பாட்டுத்திறன், செய்நேர்த்தி என்பன இவரையொரு தலைசிறந்த கலைஞராகக் காட்டி நிற்கின்றன. இவரது படைப்புக்கள் 'சங்கீதத்தை மரத்தில் வடித்த தன்மை வாய்ந்தவை' என்று கலைவிமர்சகர்களால் விமர்சிக்கப்படுவதாக பீ. பீ. கப்பாகொட என்ற விமர்சகர் குறிப்பிடுகின்றார்.

பெரும்பாலும், மரங்கள், மரங்களின், புறவெட்டுக்களைக் கொண்டு உருவாக்கப்

பட்ட ஏறக்குறைய 50 சிற்பங்கள் பல் வேறு செய்திகளை வெளிப் படுத்துபவைக ளாக உள்ளன. இச்சிற்பங்களுள் ' காவடி யாட்டம் ' , ' பாம்பாட்டி ' ' மேளகாரன் ' 'தாளம்' . 'தலை' 'ஒய்யாரம்' , 'முதுமை' 'உவமை' 'எதிர்பார்ப்பு' 'பெரியமீன்' 'தளர்ச்சி' , 'ஆண்டி' 'பயணி' என்பன இவ ரது செய்நேர்த்திக்கும், வெளிப்பாட்டுத் திறனுக்கும் எடுத்துக்காட்டுக்கள்.

'காவடியாட்டம்; , 'பாம்பாட்டி' ஆகிய சிற்பங்கள் என்னை மிகவும் கவர்ந்த படைப் புக்கள். உணர்வுகளையும், அசைவுகளையும் இவை மிகவும் லாவகமாக வெளிப்படுத்து கின்றன. 'காவடியாட்ட'த்தில் காவடியாடு பவன் மாத்திரமின்றி, குழல் ஊதுவோன், மேளகாரன் ஆகியோரும் கூட ஆடுகின்றார் கள். மகுடி ஊதும் பாம்பாட்டியே அந்த இசையில் மயங்கி பாம்பாக ஆடுவதுபோல 'பாம்பாட்டி' மிகவும் அற்புதமாக அமைந் திருக்கின்றது: இவற்றைப்போலவே 'மேள காரன்' , 'தாளம்' போன்ற சிற்பங்களும் தமது செயலில தாமே லயித்து மயங்குவது போல அமைந்துள்ளன பொதுவாக 'ஐ. வி. யின் சிற்பங்கள் கேளா ஓசையையும், அசையா அசைவையும் வெளிப்படுத்துகின் றன. இதுவே 'ஐ. வி' யின் தனித்துவம்.

நடையின் வேகத்தை வெளிப்படுத்தும் 'ஆண்டி' , 'பயன்' என்பனவும் இவரது உணர்வு வெளிப்பாட்டுத் திறனுக்குச் சான் றுகள், இவற்றை விட இளமைததும்பும் பெண் ('ஒய்யாரம்') முதுமையின் தளர்வை வெளிப்படுத்தும் வயோதிபமாது ('தளர்ச்சி') மண்வெட்டியுடன் காத்திருக்கும் 'காத் திருப்பு') விவசாயி ஆகியவையும் உயிர்த் துடிப்பு மிக்கவை.

''ஒரு கலைஞனாக லியூவின் வெற்றி எ் கருத்திலெடுக்கத்தக்க அவரது தொழில் நுட்பத் தேர்ச்சியில் மட்டும் தங்கியிருக்க வில்லை. தனது சாதனங்கள் மூலம் தனது சொந்த அநுபங்களை பரிமாற்றம் செய்யும் அவரது ஆற்றலிலும் கூடத்தான்'' என்று லியூ குவாங்ஸால் என்ற சீன சிற்பக் கலை ஞர் பற்றி ஒரு விமர்சகர் குறிப்பிட்டது திரு, ஐ வி. க்கும் அப்படியே பொருந்தும்.

25-10 89

---

## ✷ திணறல்

### ❀ தேவிபரமலிங்கம்

திணைக்களங்களுக்கு
உள்ளும் முரண்பாடுகள்
ஆட்பதிவு செய்து
அடையாளம்
காட்டுவனவற்றை
பாதுகாப்புக் கிழிக்கிறது!
கிழிக்கின்ற குப்பைகளும்,
வீதியோரம் கிடக்கின்ற
பிணங்களுமாய்
நகர்கின்றன நாட்கள்!

நாட்களுக்கு
நாட்களாக அகதிகள்
முகாம்களும்
வளர்கின்றன...
முகாம்களைப் பேணவும்
திணைக்களம் ஒன்று
உருவாகும்!
திணைக்களங்களின்
உருவாக்கம்
திணறுவதற்காமோ?

சிறுகதை

## தரிசனங்கள்

சாந்தன்

கிருஷ்ணனும் கூட்டாளிகளும் விடலைகளாயிருந்த காலத்தில் அவர்களுக்குப் பிடித்தமாயிருந்த ஒரு விளையாட்டு... இரவுத் திருவிழா வேளைகளில்-

சனங்கள் ஓரளவு கூட்டமாக நிற்கிற இடத்திற்குப் போவார்கள். ஒருவன் கொஞ்ச நேரம் வானத்தை உற்றுப் பார்த்துவிட்டு, வலு ஸீரியஸாக மற்றவனைத் தட்டி மேலே காட்டுவான்.

''அந்தா..., அந்தா...''

''ஓமோம்...'' என்பான் மற்றவன்.

இப்போது கோஷ்டி முழுவதும் இருவரையும் சுற்றிக்கொள்ளும்.

''ஓமோம் இங்கை...''

''இல்லையடா, அது...''

''போடா அதுதான்...''

அருகில் நிற்கிற சனக்கூட்டம் இவர்களைச் சூழ்ந்து தானுமிந்த 'இந்தா - அந்தா' கவி பங்கேற்கத் தொடங்க, இவர்கள் ஒவ்வொருவராகக் கழன்று, விலகி எட்டநின்று தாங்கவில்லாமலே தொடர்கிறவேடிக்கையை ரசிப்பார்கள்.

(சாந்தன் எழுதிய, 'எழுதப்பட்ட (அத்தியாயங்கள்' குறுநாவலிலிருந்து.)

பெனிடிக்ட் பாதிரியார் ஒரு வெள்ளை ராணுவ அதிகாரியை வழியனுப்புவதற்காக ஆற்றங்கரைவரை வந்தார். அதிகாரி படகிலே உட்கார்ந்து கொண்டு, படகை அக்கரை சேர்க்கும்படி நான்கு கறுப்பர்களுக்குக் கட்டளையிட்டான். அவனுக்குச் செலவு கொடுத்துவிட்டுத் திரும்பக் கரையேறிய பாதிரியார், ஒரு புதருக்குப் பின்னால் பால் பெர்ஹார்ட் முழந்தாள் படியிட்டு அமர்ந்திருப்பதைக் கண்டார். அவன் கைகள் கூப்பியிருந்தன; கண்கள் வானை நோக்கியிருந்தன. உதடுகள் துடியாக அசைந்து கொண்டிருந்தன. பாதிரியாரின் சுருக்கம் விழுந்த முகத்தில் பேரின்பப் புன்னகை மிளிர்ந்தது. முழந்தாள் படியிட்ட கறுப்புப் பையனைக் கண்களிக்கப் பார்த்துக்கொண்டே சிறிது நேரம் நின்றார். கிறிஸ்தவ போதனையின் விதைகள் எங்கேயோ எட்டாத் தொலைவில் இருக்கும் இந்த ஆபிரிக்கக் காட்டிலே கூட செழுமையாக முளைவிடுகின்றனவே, ஆகா, என்று மகிழ்ந்தார். பால் பெர்ன்ஹார்ட் அருகே சென்று, கம்பி கம்பியாய் சுருண்ட அவனது கருமயிர் மேல் கையை வைத்தார். ''சபாஷ் குழந்தாய், மெச்சினேன். அங்கேதான் வானத்தில் நட்சத்திரங்களும் அப்பால் கர்த்தர் உரைக்கிறார், நீ அவரைக் காண மாட்டாய், எனினும் அவர் உன்னையும் எல்லோரையும் காண்கிறார். எதுவும் எவரும் அவர் கண்களுக்குத் தப்பமுடியாது'' என்றார்.

பால் பெர்ன்ஹார்ட் தந்திரமாகக் கண்களை இடுக்கிக் கொண்டு, தலையை இன்னும் ஒரேயடியாக நிமிர்த்தினான்.

''என் கண்களுக்கு அவர் தெரிகிறாரே, பாதிரியார் ஐயா'' என்றார்.

எதிர்பாராத இந்தச் சொற்களைக் கேட்டுப் பாதிரியாருக்குக் கணநேரம் வாய் அடைத்துப்போய்விட்டது.

''இன்னமும் அவர் தெரிகிறாரே?'' என்று கேட்டார்.

''ஆமாம். நீங்களும் அதோ, படகிலிருக்கும் அதிகாரியும் தெரிவது போலவே தெளிவாகத் தெரிகிறார்''

இந்தப் பச்சைப் பொய்யைக் கேட்டுப் பாதிரியாருக்குக் கோபம் பீறிட்டுப் பொங்கியது. இருந்தாலும் இந்தக் கறுப்புப் போக்கிரியை நன்கு சோதித்துப் பார்த்து விடலாம் என்பதற்காகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''யாரைப்போல் இருக்கிறார்?''

நன்றாகப் பார்த்துக் கொள்பவன் போல வானத்தை நிமிடநேரம் உற்று நோக்கினான் பால்பெர்ன்ஹார்ட்.

''உங்களைப் போலவே இருக்கிறார். அவர் தாடிதான் இன்னும் நீளம். ஒரே சல்லாரி பில்லாரியாய்க் கிடக்கிறது. இன்று காலை அதை வாரிவிட்டுக்கொள்ள மறந்துவிட்டார் போலிருக்கிறது''.

''ஓகோ, அப்படியா? இப்போது என்ன செய்கிறார்?''

''புகை குடிக்கிறார்''

''புகை குடிக்கிறாரா?''

''ஆமாம். இத்தனும் பெரிய சுங்கான் எங்கள் பானை அவ்வளவு பெரியது. அதைப் புகைக்கிறார். அதிலிருந்து அடிக்கிறது ஒரே நாற்றம். வெள்ளைக்காரச் சிப்பாய்கள் சுங்கான் புகைக்கும்போது அடிப்பதைவிடக் கெட்ட நெடி. இவ்வளவு கொடிய துர்நாற்றம் உங்கள் மூக்கில் படவில்லையா என்ன?''

பெனிடிக்ட் பாதிரியாரின் விரல்கள் அவரையும் அறியாமல் கருஞ்சுருட்டை மயிர்களை இறுகப் பற்றின. ஆனால் அவர் இன்னும் தம்மைக் கட்டில் வைத்திருந்தபடியால் விரல்களைத் தளர்த்தினார். இந்த உதவாக்கரைக் கறுப்பனைக் கடைசிவரைச் சோதித்துப் பார்த்துவிட வேண்டும் என்பது அவருக்கு.

''ஆமாம், படுகிறது. அவர் இன்னும் என்ன செய்கிறார்?''

''இப்போதுதான் அவர் ஒரு வெள்ளைக்காரனுக்கு விட்டார் பாருங்க உதை. நேற்று எங்கள் அப்பன் விழுந்தானே, அதேபோலக் குப்புற அடித்து விழுந்தான் அவன். அவர் தான் ரொம்பப் பலசாலி ஆயிற்றே. வெள்ளைக்காரனால் அவரை ஒன்றும் பண்ணமுடியவில்லை''.

பெனிடிக்ட் பாதிரியாரின் பொறுமை தீர்ந்துபோய்விட்டது. இடது கையால் பையன் கருஞ்சிண்டை லபக்கென்று பற்றினார்.

**(ஆந்திரே ஊப்பித் எழுதிய மதம் மாறியவன் கதையிலிருந்து)**

... புதிய உணர்வுகளின் புலப்பாடு தெரிகின்ற ஆக்கங்களை நோக்கும்போது, இப்புதிய உணர் நிலையைப் புதிய சொற்புலப்பாடுகளால் சித்தரிக்கும் சிறுகதை எழுத்தாளர்களுள் முதன்மை பெற்றவராக ஆசிரியரை நாம் காணமுடியும். அவரது படைப்புகளின் ஆக்கப்புதுமை, அவரது நவமான புலனுணர்வு வெளிப்பாட்டில் முனைப்புறுகின்றது. உண்மையான வாசகர்களின் ஓர உணர்வுகளைக் கிளறச்செய்து திரட்டும் வலு அவரது படைப்புக்களில் பளிச்சென்று தெரிகிறது. இந்த அம்சம் அவரது கன அகற்சியைச் சுட்டுகிறதென்பது உன்னிப்புடன் மனங்கொள்ளப்பட வேண்டியதாகும். எமது இலக்கியத்தின் செல்நெறி பற்றிய உசாவலை ஒரு சவாலாக எதிர்கொள்ளும் எந்தவொரு விமர்சகரும், கடந்த தசாப்தத்தின் பிற்கூற்றிலும் இத்தசாப்தத்தின் முன், நடுக்கூற்றிலும் ஆசிரியரின் தனித்துவமான பாய்ச்சலை அவதானிக்கத் தவறமுடியாது ..

'கமமும் காமமும்'

கதைத்தொகுதி விமர்சனத்தில்

இருந்து ஒரு பகுதி

## ✶ ஒரு கவிதை

✶ மாசேதுங்

பிரியாவிடை கூறி நம்
கரங்களை அசைக்கின்றோம்
இதயம் உடைந்தது
உனது சோகமுகம் திருப்பி
உன்வேதனைகளை நீ விவரித்தபோது
உனது விழிகளும் புருவங்களும்
உன் துயரைப் பறைசாற்றின.
ஆயினும்
இமை விளிம்பதைத் தொட்ட
சூடான கண்ணீரை
நீ நிறுத்தி வைத்துக் கொண்டாய்
நம் கடைசிக் கடிதங்களில் இருந்ததெல்லாம்
நம் புரியாத்தனங்களே
இப்போதோ
மேகங்களும் மூடுபனியும் துடைத்தெறியப்பட்டுள்ளன
இப்புவியில்
நம் இதயங்களைப் புரிந்துகொண்டோர்
நாமிருவர் மட்டுமே
மனிதரின் துயருக்குக் காரணம் எது என
விண்ணுலகம் அறியுமா?
கீழைப்பெரு வாசலில் தொடங்கும் பாதை நெடுக
விடியற்காலையின் மூடுபனி
கீழ்வானில் தேய்ந்து மறையும் நிலவு
தடாகத்துக்கு ஒளியூட்டுகிறது
இது தனிமை உணர்வுதரும் காட்சி
ஓர் ஊதலொலி கேட்கிறது
என் இதயம் உடைகிறது
இனி நான் உலகின் விழிம்புக்குத்
தன்னந்தனியாகவே பயணம் செய்யவேண்டும்
குன்லூன் மலைகளில் உள்ள
ஓர் குத்துப் பாறையைப் பிளப்பதுபோல்
அல்லது
பேரண்டத்தின் ஊடே ஓர் சூறைக்காற்று
சுளன்று வீசுவதுபோல்
துயரச் சிக்கல்களைப்
பிரித்தெடுக்கவேண்டும் நாம்
மீண்டும்
அருகருகே பறந்து சென்று
மேகங்களைத் தொட்டிடுவோம்.

# பெண் திரைப்படநெறியாளர்

## அபர்ணா சென்

*நீலகி*

திரைப்படமென்பதை ஒரு கலைவெளிப்பாட்டுச் சாதனமாகக் கொண்டு, தான் வாழும் சமூகத்தை விமர்சன ரீதியாக அவ் ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்த முயலும் இன்றைய இளம் திரைப்பட நெறியாளர்களுள் அபர்ணா சென் என்ற பெண் திரைப்பட நெறியாளரும் ஒருவர். ஆற்றல் மிக்க திரைப்படக்கலைஞர்கள் பலரும், ஆதிக்கம் செலுத்தும் வர்த்தகச் சூழலில் தம்மை இழந்து போகின்ற அவலம் இவருக்கு ஏற்படவில்லை. அத்தோடு, இந்தியா போன்ற நாடுகளில் பெண் கலைஞர்களாக இருப்பதால் எழக்கூடிய சவாலுக்கும் முகம் கொடுத்து வெற்றிகண்டுள்ளார் இவர்.

அபர்ணா சென் திரைப்படத்துறைக்குப் புதியவரல்ல. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, சத்யஜித் ரெயின் 'தீன் கன்யா' என்ற திரைப்படத்தில் நடித்தது தொடக்கம் திரைப்படத்துறையோடு மிகவும் நெருக்கமுடையவர். இவரது தந்தை சித்தானந்த தாஸ் குப்தா குறிப்பிடக்கூடியதொரு திரைப்பட விமர்சகர், சத்யஜித் ரேயுடன் சேர்ந்து ஆரம்ப காலங்களில் கல்கத்தாவில் திரைப்படச்சங்கத்தை நிறுவினர். 'பதர் பாஞ்சாலி' உருவாவதற்குப் பெரும் பங்காற்றியவர். (ஆனந்த குமாரசாமியின் 'சிவதாண்டவம்' என்ற விவரணத் திரைப்படத்தை நெறிப்படுத்தியவரும் இவரே.) தந்தையின் திரைப்பட ஈடுபாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்ட அபர்ணா சென் இளமையிலிருந்தே சர்வதேச ரீதியில் அறியப்பட்ட உன்னத திரைப்படங்களோடு பரிச்சயம் கொண்டிருந்தார். இவையே இவரின் கலையாளுமைக்கு வித்திட்டன என்று சொல்லலாம்.

இவர் முதன்முதல் நெறிப்படுத்திய திரைப்படமே இவருக்குப் புகழீட்டிக்கொடுத்தது. '36 சௌரிங்கி லேன்' என்ற இத் திரைப்படம் 1982ல் மணிலாவில் நடைபெற்ற சர்வதேச திரைப்படவிழாவில் சிறந்த படத்துக்கான பரிசையும், சிறந்த நெறியாளருக்கான பரிசையும் பெற்றுக்கொண்டது. அடுத்து இவர் நெறிப்படுத்திய திரைப்படம் 'பரோமா', இவ்விரு திரைப்படங்களுமே வெளிவந்தபோது, இவர் தனது கலையுலக வழிகாட்டியான சத்யஜித் ரேயைக்கூட மிஞ்சிவிட்டாரென விமர்சகர்களால் பாராட்டப்பட்டார்.

அபர்ணா சென் கடைசியாக நெறிப்படுத்திய திரைப்படமான 'சதி' அண்மையில் கல்கத்தாவில் நடந்து முடிந்த 21வது இந்திய சர்வதேச திரைப்படவிழாவில் காண்பிக்கப்பட்டது. இத்திரைப்படத்தின் கதையும், திரைப்படத்துக்கு இருக்கக்கூடிய செய்நேர்த்தியும் பலரதும் கவனத்தைக் கவர்ந்தாதக விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உமா என்ற இளம்பெண் ஒரு அனாதை, ஒரு ஊமையும் கூட. மாமன் முறையான ஒருவரால் வளர்க்கப்படுகிள்ருள். 'சதிபூஜை' என்ற நிகழ்ச்சியை ஒருமுறை காணும் சந்தர்ப்பத்தில் அதிர்ச்சியடைகின்ருள் அவள். பழமையில் ஊறிப்போனவரான அவளது மாமா அவளுடைய ஜாதகத்தைக் கணித்துப் பார்க்கின்ருர். திருமணமானுல் அவள் விதவையாகிவிடுவாள் என்று ஜாதகம் சொல்கின்றது. இதனுல் உமா ஒரு மரத்துக்குத் திருமணம் செய்து வைக்கப்படுகின்ருள். மரத்திலுள்ள பொந்தில் அவள் வாழ்க்கை தொடருகின்றது. அவள் தனது விதியை ஏற்றுக்கொண்டு, மரத்தோடான உறவோடு ஒன்றிப்போகின்ருள். ஒருநாள், உமாவுக்கு வித்தியாசமான அனுபவம் ஒன்று ஏற்படுகின்றது. பலத்த மழை பெய்கின்றபோது ஒரு வீட்டில் பாதுகாப்பிற்காக ஒதுங்குகிருள். அது ஒரு பள்ளியாசிரியரின் வீடு.

சந்தர்ப்ப சூழ்நிலையினால் அந்த மனிதனோடு உறவு கொள்கிறாள் அந்தப்பெண். முதலில் மறுத்தாலும் பின்னர் இணங்கிப் போகின்றாள். துரதிஸ்டவசமாக அவள் கர்ப்பிணியாகிறாள். செய்தி ஊரில் பரவுகிறது. கட்டுக்கதைகளிலும், அபார இயற்கைச் சக்திகளிலும் அபார நம்பிக்கைகொண்டவரான உமாவின் மாமா, உமா கற்பம் தரித்ததை மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியின் விளைவு என்று நம்புகின்றார். அத்தோடு, உமாவைப் பிடித்திருந்த எல்லாவித துரதிஸ்டங்களும் இத்தோடு தொலைந்து விடுமென்று அவா நம்புகின்றார்.

காலம் செல்கின்றது. மீண்டுமொரு முறை வழமைக்கு மாறான பலத்த மழை கொட்டுகின்றது. அந்தப் மரப்பொந்துக்குள்ளேயே உமா பதுங்கிக்கிடக்கின்றாள். மழை, முழக்கம், மின்னல் - இவற்றோடு இரவு நீடிக்கின்றது அவ்வூர் பூசாரியுட்பட எல்லாருமே பதறிப்போகின்றார்கள். காலையில் அம்மரம் வேரோடு சாய்ந்து கிடப்பதையும், தாய்மை கொண்ட உமா அந்த மரத்துக்கடியில் இறந்துகிடப்பதையும் எல்லோரும் காண்கின்றார்கள்.

பெண்களின் சமூக இருப்புப்பற்றி இன்று பரவலாகவும் ஒரு விழிப்புநிலை ஏற்பட்டுவருகின்றது ஆணாதிக்கம் கொண்ட சமூக அமைபில், பொருளாரதார சமத்துவம் பேணப்படாத ஒரு சூழலில் பெண்கள் எவ்வாறு நடத்தப்படப்படுகின்றார்கள் உடல் உளவியல் ரீதியில் பாதிக்கப்படும் அவர்களின் சமூகப்பெறுமதி என்ன என்பது பற்றி சமூக அக்கறை கொண்ட கலைஞர்கள் கலைப்படைப்புக்கள் மூலம் வெளிப்படுத்திவருகின்றனர். அபர்ணா சென்னும் தன் திரைப்படங்களின் மூலமே இதையே சாதித்துவருகின்றார்.

## இரு பறவைகள்: ஒரு உரையாடல்

மாசேதுங்

அந்தப் பெரும்பறவை
தன் இறகுகளை விசிறியாய் விரித்து
தொண்ணூறாயிரம் லி தொலைவு உயர்ந்து
சீறும் புயலைக் கிளப்புகிறது
அதன் முதுகுக்கு மேலே நீலவான் இருக்க
ஊர்களும் நகரங்களும் உள்ளடங்கிய
மனிதனின் உலகை அளவிட
அது
கீழே பார்க்கிறது
துப்பாக்கி வெடிப்புகள் விண்ணைச்
சிராய்க்கின்றன
பீரங்கிக்குண்டுகள் நிலத்தினைத்
துளைக்கின்றன
ஓர் சிட்டுக்குருவி தன் புதருக்குள்ளே
அஞ்சி விறைத்து நிற்கின்றது
''சே, என்ன இது ஓர் குழப்பப் பாழ்நரகம்
ஓ, நான் இதிலிருந்து நழுவிப்
பறந்து விட விரும்புகிறேன்''
எங்கே என நான் கேட்கலாமோ
எனப் பெரும் பறவை வினவ
சிட்டுக் குருவி சொன்னது
தேவதை நாட்டு மலைகளின் மீதே
இரத்தினங்கள் பதித்த மாளிகைக்கு
இரண்டாண்டு முன்பு
இலையுதிர் கால ஒளிமிகு நிலவில்
மும்முனை ஒப்பந்தம் கையெழுத்தானது
உனக்குத் தெரியாதா?
இங்கேவயிறு புடைக்கத்தின்னலாம்
ஆவி பறக்கும் உருளைக்கிழங்குடன்
மாட்டிறைச்சி நிறைந்தஉணவு வகைஉண்டு
பெரும் பறவை சொன்னது
''நிறுத்து உன் வெற்றுஉளறலை
உற்று நோக்கு
உலகம் தலைகீழாய்ப் புரட்டப்படுவதை''

## நினைக்க மறந்த '71'

எஸ் ஜி கணேசவேல்

நேற்றுவரை எம்முடைய
நெஞ்சுக்குள் பதிந்தவைகள்
தவறாய்ப் போச்சு!
வேற்றுமொழி பேசும் அவர்
பிறத்தியார் ஆனதினால்
வெறிகொண் டெங்கள்
கூற்றுவராய் நாசங்கள்
புரிகின்றார் என்றிருந்தோம்
தெற்கில் இன்று -
ஆற்றினிலே மிதந்துவரும்
அடையாளம் காணப்படா
அந்தப் பிணங்கள் ..

தமதினத்தை இப்படியாய்
அழிப்பாரா என்றெல்லாம்
தர்க்கம் போட்டோம் -
அடக்குமுறைச் சின்னம்தான்
அரசயந் திரமென்ற
இனவெறியை மொழிவெறியை
இரத்தத்தில் ஊட்டினதால்
அவர்கள் எங்கள்
குருதியிலே களிக்கின்றார்
கோதையரைக் கெடுக்கின்றார்
கொழுத்துகின்றார்...
கூற்றே உண்மை!

காந்தியின் புத்திரர்கள்
காவற்தே வதைகள் எனக்
கனவு கண்டோம்!
சாந்திவரும் என்றெண்ணிச்
சந்திகளில் வீதிகளில்
சைகை செய்தோம்
ஊர்ந்துவரும் டாங்கிகள் எம்
உயிர்காக்கும் என நினைந்து
உறவும் கொண்டோம்! —
மீண்டும் எம் வீடுகளில்
மண்ணெங்கும் அதேபழைய
மரண காண்டம்!

புத்தர் முதல் காந்திவரை
போதித்த அகிம்சையெல்லாம்
பேச்சில் மட்டும்
பத்திரிகைச் சுதந்திரங்கள்
பாராளு மன்றமெல்லாம்
மேற்பூச் சேதான்!
யுத்தமென்று வந்தவுடன்
ராணுவத்தின் தாய்ப்பாஷை
துவக்குத் தானே! —
எங்களது அழிவிடையே
எழுபத்தி ஒன்றையும்
மறந்தே போனோம்!.

## வரப்பெற்றோம்

சங்கரன்
வளவைவளவன்
மீராவெளியீடு
38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
விலை ரூபா: 20/-

கைலாசபதியும் நானும்
கே. எஸ். சிவகுமாரன்
தமிழ்மன்ற வெளியீடு
கொழும்பு.
விலை ரூபா: 12/-

அணையாத அறிவாலயம்
விடியலின் கானம்
இன்னமும் இருட்டினில்
உறக்கம் தேடும் உலகிற்காய்
உனக்குள்ளேயே உள்ளிருப்பு
இழப்புக்களையும் இழப்போம்
கல்லறைக்குள் கதிரவன்
சார்ள்ஸ் (கவிதைகள்)
வசந்தம் வெளியீடு
89, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

காணி உறுதி
இளையவன்
பொன்னி வெளியீடு
12, முதல் பிரதானசாலை அடையாறு
சென்னை-20.
விலை ரூபா: 12/- (இந்தியா)

# GLOBE FISH [Private] Ltd

127/7B TEMPLE ROAD,
JAFFNA.

*ICE BLOCKS*
*FISH MEAL*
*FISH NET*

&

*EXPORTERS OF*
*BECHE - DE - MER*
*CHANKS, SEA FOODS*

**GLOBE FISH (PVT) LTD**

*Euroville*

*With the best compliments*

**Euroville Engineers and Constructors**
**Pvt. Ltd.**

449, Stanley Road, Jaffna.

வாழ்த்துக்கள்

***RADIOS PATHY***

58, Kasthuriyar Road,

JAFFNA.

குதூகல ஆரம்பம்

3-11-1989

அருள் எலக்றிக்கல்ஸ்.

110, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

சமர்க்கு வாழ்த்துக்கள்

தரமான கோழித்தீன், கால்நடைத்தீன் மற்றும்
மூலப் பொருட்களுக்கு நாடுங்கள்

**DURGHA ENTERPRISES LIMITED**

INUVIL.

## கலை, வர்த்தகக் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## A/L கலை வர்த்தக வகுப்புகள்

1990 சனி ஞாயிறு

1990 பகல் வகுப்பு

1991 சனி ஞாயிறு

G. A. Q. - B. A. வகுப்பு

நடைபெறுகின்றன.

*With the best Compliment*

# MORAIS

**OPTICIAN DENTAL TECHNICIAN**

*50, Clock Tower Road,*

(Opposite of Wellington Theatre)

*Jaffna.*

சமர்க்கு வாழ்த்துக்கள்

## *Kalyani*

## ***Cream House***

73, Kasturiar Road,

JAFFNA.

*With the best compliments*

★

## *Promoters Engineering Company Ltd.*

844, POINT-PEDRO ROAD,

NALLUR - JAFFNA.

"சமர்"க்கு வாழ்த்துக்கள்

**Poopalasingam Book Depot**

*phone* 23431

*JAFFNA.*

# Rio Cream House

*75, Bankshal Street,*
*JAFFNA.*

ஐஸ் கிறீம்
ஐஸ் பழம்
ஐஸ் சொக்

*Branch*

றியோ கிறீம் ஹவுஸ்
KANDY ROAD,
CHAVAKACHCHERI.

"சமர்" கலை இலக்கிய சஞ்சிகைக்கு
அன்பு கனிந்த வாழ்த்துக்கள்

# பிளவ்ஸ் கிறீம் ஹவுஸ்

ஐந்துசந்தி — யாழ்ப்பாணம்.

திருமணம் மற்றும் வைபவங்களுக்கு
ஜெனரேட்டர், ஐஸ்கட்டி, பீடா
மற்றும் உணவு வகைகளுக்கும்

பிளவ்ஸ் கிறீம் ஹவுஸ்

டானியல் அன்ரனி

'அலை' 31 வது இதழில் (சித்திரை 1988) எனது அரசியல் கலை இலக்கிய தொடர்புகள் புற்றியும் எனது சிறுகதைத் தொகுதி 'வலை' பற்றியும் 'பயணி' என்னும் பெயரில் ஒழித்திருக்கும் அ. யேசுராசா கொச்சைத்தனமாக எழுதியிருந்தார். இவரது கீழ்த்தரமான தாக்குதல்களுக்கு இவர் கூறும் காரணம் 'ஈழமுரசு' வின் இலக்கியச் சாளரத்தில் அலை, அலையோடு தொடர்புடையவர்கள் பற்றி நான் ஆக்ரோசமாக தாக்கி எழுதியிருக்கிறேன் என்பதே அப்போதய இலக்கிய போக்குகள் குறித்தும் பின்னணியாக உள்ள அரசியல் நிலைமைகள் குறித்தும் பொதுவாகவே நான் எழுதியிருந்தேன் ஆயினும் அலை, அலை சார்ந்தவர்களுக்கு தொப்பி அளவாகத்தான் அமைந்து விட்டது. ஆனல் உண்மையில் அவரது சினத்தீற்குக் காரணம் அவரது கவிதைத் தொகுதியான ''அறியப்படாதவர்கள் நினைவாக...! நூலின் விமர்சன அரங்கில் சபையோர் குறிப்புரையின் போது'' யேசுராசா சில நல்ல கவிதைகளை எழுதியிருக்கிருர். ஆனல் நல்ல கவிஞனாக உருவாக வில்லை'' என நான் கூறியிருந்ததே. விமர்சன அரங்கில் வாசிக்கப்பட்ட கா .சிவத்தம்பி அவர்களின் விமர்சன கட்டுரையிலும், திருமதி சித்திரலேகா மௌனகுருவின் விமர்சனத்திலும் இதே கருத்து நிலவியதை கவனிக்கக் கூடியதாக இருந்தது யேசுராசா விமர்சனங்களை ஜீரணிக்க முடியாத இலக்கிய நோஞ்சானு?

சரி என்னைப்பற்றி 'அலை' யில் எழுதியிருந்த கருத்துக்களுக்கு வருவோம் (1) ''சீனச்சார்பு கம்யூனிஸ்டாக தன்னைக் காட்டிக் கொண்டடானியல் அன்ரனி ஒரு காலத்தில் 'அண்ணை .. அண்ணை.! என்று சொல்லியபடி ரஷ்யச்சார்பாளரான டொமினிக் ஜீவாவிற்கும் மல்லிகைக்கும் பின்னல் திரிந்தார்; பிறகு டானியலோடு சேர்ந்து கொண்டு ஊர் ஊராக அவரோடு கூட்டங்களுக்குச் சென்று அவரைப் புகழும் 'நகர்ந்து செல்லும் குழு' வில் (தேர்தற் பேச்சாளர்களைப் போல) ஒருவராஞர் பிறகு 'சமர்'க் காலத்தில் கைலாசபதியின் வரட்டுக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்கியபடி அவரது ''குடை நிழலில்'' நின்ருர். இலக்கிய ஸ்தானங்கள் வாய்ப்புகளிற்காகவே பிரபலமானவர்களுடன் ஒட்டி நின்ருர் இன்று ஈழமுரசிலுள்ள தனது இரண்டொரு இலக்கிய நண்பர்களுடன் ஒட்டிக் கொண்டு 'வேறு முகம்' காட்டுகிருர் (2) .. ஆனல் தேசிய இன ஒடுக்கு முறைகள் பற்றி கதைப்பதை எழுதுவதை 'பிற்போக்கு' என்று முத்திரை குத்திய ''முற்போக்குக் கும்பலுடன்'' - இன ஒடுக்கு முறைகளிற்கெதிரான கலை இலக்கியங்கள் ஒரு காலம் வரை முனைப்புடன் வளர்ச்சியடைவதைத் தடுப்பதில் முக்கிய பங்காற்றிய கைலாசபதியுடன் இவர்தான் நின்றிருக்கிருர்; அக்காலங்களில் ''பொதுப் பொருளாதாரம், இல்லை யென்று சொல்லி எம்மைத் தேசிய இனமாக அங்கீகரிக்க மறுத்த சிறியதொரு கட்சியின் சார்பாளராக இருந்திருக்கிருர்''

மேற்குறிப்பிட்ட விடயங்கள் அரசியல் கலை இலக்கிய நண்பர்களுடன் எனக்கிருந்த உறவு பற்றி குறிப்பிடுகின்றன டொமினிக் ஜீவா கைலாசபதி, டானியல் போன்றவர்களுடன், அரசியல் கலை இலக்கியம் பற்றிய கொள்கைகளில் சில கருத்துவித்தியாசங்கள் இருப்பினும் - இவை எமது நட்புக்கு தடையாக இருக்கவில்லை கருத்து முரண்படுகளை பேசி விளக்கிக் கொண்டிக்கிருேம் ஏன் நட்புக்கு எந்த விதத்திலும் அருகதையற்ற யேசுராசாவுடன் கூட நண்பனக இருந்திருக்கிறேன் - டானியலின் நூல்களை கூட்டங்களில் சரியாகவே விமர்சித்திருந்

திருக்கிறேன் கைலாசபதி, கவிஞன் நீலா வாணன், மஹாகவி மு தளையசிங்கம் போன்ற படைப்பாளிகளை விமர்சனத்திற்கு உட்படுத்தாமல் புறக்கணித்தமைக்கு எனது அதிருப்தியை பகிரங்கமாகவே தெரிவித் திருக்கிறேன் டோமினிக் ஜீவாவிற்கு எனது அரசியல் நிலைப்பாடு தெரியும்.

ஆரப்பத்தில் 'பச்சை' தமிழரசுக் கட்சிக் காரனாக தொடர்ந்து 'சூரியனுக்கு' புள்ளடி போட்ட யேசுராசா, சீனசார்புடைய இலக் கிய வாதிகளாக இருந்த நுஃமான் சிவசே கரம், சண்முகம் சிவலிங்கத்தோடு எப்படி நட்பு வைத்திருக்க முடிந்தது. இவர்கள் எல் லோரும் கைலாசபதியின் நண்பர்களும், முற் போக்கு அணியைச் சேர்ந்தவர்கள் அல்லவா :முற்போக்கு' அல்லாத மு. புஸ்ப்பராசா குப்பிளான் ஐ. சண்முகன், இமையவன் ஆகியோர் எப்படி அலையில் இணை ஆசிரியர் கள் ஆனார்கள்? (பிறகு ஒவ்வொருவராக களன்று போனார்கள்) பிரபஞ்ச யதார்த்தவாதியான மு. தளையசிங்கத்தின் சீடப்பிள்ளைகள் மு. பொன்னம்பலம், சு. வில்வரெட்டினம் ஆகியோருக்கும் இவ ருக்கும் இடையேயுள்ள நெருக்கம் எப்படி? 'தமிழியல்' பதமநாப ஐயர், மயிலங்கூடல் நடராஜன் ஆகியோர் இவரது அரசியல் கருத்துக்களுக்கு உடன்பாடானவர்களா? யேசுராசாவிற்கு எத்தனை 'முகங்கள்'.

கைலாசபதி கொழும்பில் (பல்கலைக்கழ சத்தில்) இருந்த காலத்தில் கொழும்பு கலை இலக்கிய நண்பர்களுடன் சேர்ந்து கைலாச பதியை தரிசிக்க அடிக்கடி வீட்டிற்கு போய் வந்ததும், அவரது ஆசீர்வாதம் கிடைக்கா மல் போகவே தூற்றித்திரியத் தொடங்கி னர் இதேபோன்று டானியலிடம் தனது சிறுகதைகளை காவித் திரிந்து ''பார்த்துத் தரும்படி'கேட்டதும் 'சிறுகதைகளா இவை' என டானியல் கேட்டதும் அவரைப் புறங் கூறத் தொடங்கியதும் சிறிய தொரு கட்சி யெனவும் தமிழ் இனத்தை தேசிய இனம் என அங்கீகரிக்க மறுத்தவர்கள் எனவும் இவ ரால் நையாண்டி செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சண் முகதாசனின் கொழும்பு வீட்டிற்கு அடிக் கடி நண்பர் கேதாரநாதனுடன் சென்று அரசியல் ஞானம் பெற்றதும் ''பிடிக்காத ஆளாச்சே'' என்று நண்பர் ஒருவர் கேட்ட போது ''சண்முகதாசன் திருந்தி விட்டார்'' (திருந்தியதுயார்? சண்முகதாசனா யேசுரா சாவா?) எனக் கூறி அவரது ஆங்கில நூல் ஒன்றை தமிழில் மொழி பெயர்த்து ''பாசறை'' வெளியீடாக வெளியிட இவர் முயற்சி செய்ததும் பலருக்கும் தெரியாத உண்மை - கருத்துமுரனுள்ள பல்வேறு அணியினருடனும், நட்புக் கொண்டிருந்த இவரும் தான் 'பிரபல்ய' வாய்ப்புக்காக அலைந்திருக்கிறாரா? எத்தனை காலம் தான் இப்படி ஏமாற்றுவார் யேசுராசா. முதலில் கிழிக்க வேண்டியது இவருடைய முகமூடி என்பதைவிரைவில் காலம் சொல்லும். இன் னும்வரும்)

---

கே. கணேஷ் அமைதியாக இருந்து தமது இலக்கியப் பணியை மேற்கொள்ப வர். இளைய பரம்பரையினர் மத்தியிலே இவர் நன்கு அறிமுகம் பெற்றவர் எனக் கூற முடியாது. விளம்பரமின்றியே நிலை யாக ஓர் இடத்தைப் பெற்ற ஒரு சில மூத்த எழுத்தாளர்களில் கணேஷும் ஒருவர்.

கணேஷ் ஒரு பழுத்த கனி, முற்போக் குச் சிந்தனைகளைப் பச்சையாகப் பரிவர்த் தனை செய்யாதவர், எமது ஆழ்ந்த அறநெறி கள், தார்மீகங்கள், பண்பாட்டுக் கோலங்கள் போன்றவற்றில் அமிழ்ந்து பெறப்பட்ட வற் றைத் தெளித்துத்தருபவர். அவ ருடைய ஹோ-சிமின், பார்ப்பரா, குப்ரியா னேவ் சாந்தோர் பெட்டோவ்ஃபி போன்ற வர்களின் கவிதைகளைத் தமிழ்மயமாய் தந்த திலிருந்தே நாமறியலாம்.

நன்றி

எஸ். வி. இராஜதுரை (மாசேதுங் கவிதை)

இந்திரன் (அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்)

கே கணேஷ் (சாந்தோசப் பெட்டோவ்ஃபி எத்தனைநாள் துயின்றிருப்பாய் என் னருமைத் தாய்நாடே.)

---

ஆசிரியர்:- டானியல் அன்ரனி 17/21 சென் மேரிஸ் வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு:- புதிய சித்திரா பதிப்பகம்